சுத்தானந்த பாரதியாரின்

# புதுயுகப் பாட்டு

ஓம்

சுத்தசக்தி

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY ✦ TANJORE ✦
756

புது யுக நிலையம்
புதுச்சேரி

692

சுத்தானந்த பாரதியாரின்

# புதுயுகப் பாட்டு

692

புது யுக நிலையம்
புதுச்சேரி

# புது யுகப் பாட்டு

# THE NEW ERA SONGS

( Shuddhananda Bharati )

**Price Rs. 1–8–0**

(விலை ஒன்றரை ரூபா)

*All Rights Reserved by The Poet.*

# புது யுகப் பாட்டு

கவிக் கனவுகளுக்குப் பிறகு **புதுயுகப் பாட்டு** வருகிறது. கவிக் கனவுகளை மானிட சமுதாயத்தில் நிறைவேற்றும் காட்சிப் படலங்களே இப்பாடல்கள். மலையருவி வளர்க்கும் பசுவயலின் அருணோதயக்காட்சியே உலகிற் சிறந்த அழகாகும். அக் காட்சிபோல் மானிட வாழ்வையும் அருளும் அழகும் பொலியச் செய்து, பூரணமாக்கலாம். இப்போது உலகிற்காணும் வேறுபாடுகளும் ஊறுபாடுகளும், மனதின் மாறுபாடுகளே.

மனவேறுபாட்டில் வாழுமட்டும், உலகில் சாதிமத நாடுநிற பேதங்கள் சலசலக்கும். மனங்கடந்த அருள் நிலையுண்டு. அந்நிலையில் வாழ்ந்தால், இன்றுள்ள சிக்கல்கள் ஒழியும்; ஒரே வான் சூழ்ந்த ஒரே உலகில், மனித சமுதாயமெல்லாம் உள்ளொன்றி வாழும். ஒவ்வொருவருள்ளும் சுத்த சுதந்தர சமத்துவ சக்திமயமான அந்தராத்மா உள்ளது. அதைத் தியானத்

தால் உணரலாம். அந்த உணர்ச்சியுடன் எல்லாரும் எல்லாருக்கும் வாழ்ந்தால், ஒவ்வொருவரும் உலகாகலாம், ஒவ்வோர் உள்ளமும் விண்ணரசென நிலவலாம். மனிதன் தெய்வ சக்திபெற்ற அதிமனிதனாகலாம். பழைய சண்டையுகம் ஒழிந்து, புதிய சத்தியயுகம் பிறக்கும். அந்தப் புது யுகத்தில் போட்டி பொறாமை போர் கொள்ளைகளின்றி, வாழ்வெல்லாம் அருளின்பக் கலைக் கோயிலாகும்.

இந்த வாழ்வே புதுயுக வாழ்வு. அதன் உயிர் சுத்தம், உடல் சுதந்தரம், உள்ளம் சமத்துவம், அதன் நாடிகள் தெய்வ சக்தி. கல்வி, தொழில், கலை வாணிகம், அரசியல், சமுதாயம் முதலிய எல்லாத் துறைகளிலும் புதுமை பொலிய வாழும் வழியையே புதுயுகப் பாட்டு இசைக்கிறது. பாடுங்கள், பயிலுங்கள், இன்புறுங்கள்.

**புது யுக நிலையம்**
புதுச்சேரி
15—8—47 சுதந்தரநாள்

**சுத்தானந்த பாரதி**

# புதுயுகப் பாட்டு

## 1. மானிட வாழ்க்கை

(செஞ்சுருட்டி) (ரூபகம்)

மானிட வாழ்க்கை யெனும்—சுப
மங்கல வீணையிலே
ஆனந்தப் பண்ணொலிப்பாய்—பரமா
அன்புரு வானவனே.

கட்டற்ற காற்றினைப்போல்—மதி
கண்ட கடலினைப்போல்
கொட்டும் அருவியைப் போல்,—ஜீவக்
குழலிற் பாட்டிசைப்பாய்

கதிர்-மதி விழியால்—என்னைக்
காணுயிர்க் காதலனே!
புதிய காலையிலே—என்னுட்
புள்ளிசை யாய் வளர்வாய்

உலகக் கோயிலிலே—இறைவா
உன்னை அலங்கரிக்கும்—பா
மலர்ப்பணி புரியும்—இன்ப
வரம் எனக்கருள்வாய்.

## 2. புதிய காலை

(பூபாளம்) (ரூபகம்)

புதிய காலை உதய மானதே—பரி
பூரணன் அருளினாலே (புதி)

துதிசெய் அன்புத் தொண்டர் கூட
சுதந்தர கீதங்கள் பாடப் (புதி)

அரும்பவிழ்ந்து விருந்தளிக்கும்
அழகு மலர்கள் பரிமளிக்க,
சுரும்பு வேத சுருதி யோத
சுழலுந் தென்றல் குழலை யூத (புதி)

ஞான வாணி வீணை மீட்டவே
ஞாலம் இன்பக் கோலங் காட்டவே
வானமுதம் வாழ்வை யூட்டவே
மங்கலங்கள் பொங்கிப் பொலியும் (புதி)

## 3. ஜண் ஜண்

(காபி) (ஆதி)

ஜண் ஜண் ஜண் என
    ஜயமணி யடிப்போம்
மண் விண் ஆகிய
    மங்கலத் துடிப்பால்

கண்கண் கலந்தொளி
    கண்டது போலே,
பெண் ஆண் சரிநிகர்
    பேரின்பங் கண்டோம் (ஜண்)

முழுமடப் பொய்கள்
    மூய்ந்தன வென்றே
எழுபுது நலங்கள்
    இலகிட நன்றே (ஜண்

அழகினை யணிந்தே
    அன்பினை உணர்ந்தே
பழகிய நண்பர்
    பாரெங்கும் இணைந்தே (ஜண்)

அதஞ்செய்யும் அரக்கர்
அடியுடன் ஒழிக !
சுதந்தரத் திருவின்
சுடர்நகை பொழிக ! (ஜண்)

## 4. எல்லாரும் வாருங்கள்

(காபி) (ஜம்பை)

எல்லாரும் வாருங்கள், எல்லாரும் சேருங்கள்
ஈசனை அன்பு செய்வோம்—ஜக
தீசனையே நினைவோம்
எல்லாரும் பாடுங்கள் எல்லாரும் கூடுங்கள்
இன்பச் சிகரத்திலே—இனித்
துன்பக் கவலை யுண்டோ ? (எல்)

சாதிமதநிற பேதமில்லை யிங்கே
சத்திய சாதனத்தால்—ஜீவன்
முத்தி நலம் பெறலாம்!
ஆதி அருட்பெருஞ் சோதி சுத்தசச்சி
தானந்த மென்றறிவோம்—உள்
அன்பிருந்தாற் பெறுவோம். (எல்)

ஒன்றே பரம்பொருள், ஒன்றே உயிர்க்குலம்
ஒன்றே உலகம் என்போம்—எல்லாரும்
ஒற்றுமை யாய்த் தழைப்போம்.
நன்றே நினைத் திடுவோம்—நினைத்ததை
அன்றே செய்து முடிப்போம்—பலன்களை
ஐநிலத்திற் களிப்போம் (எல்)

## 5. புதுயுகம் வரவேண்டும்

(பேஹாக்) (ஆதி)

*பல்லவி*

புதுயுகம் வரவேண்டும்—நாங்கள்
பூரணராய் நர நாரணராய் வாழப் (புது)

*அநுபல்லவி*

இதுபொருள் என்றெம் இதயம் உணரப்
பொதுநடம் புரியும் புண்ணியனே—நல்ல (புது)

*சரணம்*

மனவிகாரமாம் சாதிமதபேதம்
மாறும் சமநிலை வேண்டும்.

எனது உனதெனும் சண்டைகள் இன்றியே
எல்லாரும் ஒன்ருக வேண்டும்
ஜனசமு தாயம் எங்குமே திவ்ய
சங்கம் விளங்கிட வேண்டும்
உனது சச்சிதா னந்தச் சிகரத்தில்
உள்ளம் உலாவிட வேண்டும்.

## 6. எல்லாரும் இன்புற

(மால்கோஸ்) (ஆதி)

எல்லாரும் இன்புற வாரீர்—புவி
எங்கும் சுதந்தரச் சங்கொலி கேளீர்
அல்லல் ஒழிந்தது காணீர்—இனி
அச்சமும் இல்லை அநீதியும் இல்லை (எல்)

பொதுநலமே எங்கள் மூச்சு—காலப்
போக்கை அறிந்து புரிவதே பேச்சு
புதுயுக மே எங்கள் காட்சி—பரி
பூரண சக்தி பொலிவது மாட்சி (எல்)

ஓடும் அருவியைப் போலே—நதி
ஊட்டி வளர்த்திடும் தோட்டத்தைப் போலே,
பாடும் குழலிசை போலே,—நாம்
பாருக்கு நல்லதை யாருக்கும் செய்வோம் (எல்)

அமைதியி ஞல் வரும் சக்தி—வெறும்
ஆத்திரக் கூச்சலாம் ஆவது கத்தி
சமதையில் வருவது வெற்றி—சுத்த
சன்மார்க்க சாதனம் தருவது சித்தி (எல்)

மனித சமுதாயம் ஒன்றே—அதன்
மன்னவ ஞை மனச்சாட்சி ஒன்றே
இனிய உலகமும் ஒன்றே—உல
கெங்கும் நிறைந்த இறைவனும் ஒன்றே (எல்)

## 7. வேத வழியினிலே

(புன்ஞகவராளி) (ஆதி)

வேத வழியினிலே—ஆத்ம
வீரராய் வாழ்ந்திடுவோம்
தீதறு நன்மையெல்லாம்—நாளும்
தினகரன் எனப்புரிவோம். (வேத)

இந்திர வச்சிரம்போல்—உடல்
இறுகிப் பலம் பெருக,
சிந்தை யுறுதிபெற—நல்ல
தேகப்பயிற்சி செய்வோம் (வேத)

மனக்குரங் கடங்கிடவே—தியான
மன்றினில் ஒன்றிடவே
தனிப்பொருள் கண்டிடவே—யோக
சாதனம் செய்திடுவோம் (வேத)

உரையினில் வாய்மையுடன்—தூய
உள்ளத்தில் உண்மையுடன்,
புரிவதில் மெய்ம்மையுடன்—நாம்
பொதுநலம் போற்றிடுவோம் (வேத)

இருளினின் றொளிக் குயர்வோம்—இனி
இன்னல்விட் டின்புறுவோம்
அருளுணர் வோங்கிடுவோம்—இங்கே
அமர நிலை பெறுவோம் (வேத)

## 8. புதுயுக முரசம்

(பேஹாக்) (ஆதி)

ஜய ஜய ஜயவெனப் புதுயுக முரசம்
தழங்குது சத்திய கர்ஜனை செய்தே
பயமிருள் பந்தனை சிந்திடச் சுதந்தரப்
பண்ணொலி யுடன்புகழ்
விண்ணொடி ரொலித்திட

*சரணங்கள்*

ஒன்று பரம்பொருள் என்றும்—அதை
ஓமென வேதங்கள் ஓதும்
நின்ற தியானத்தி னாலே—அதை
நெஞ்சில் உணர்வது போதம். (ஜய)

உலகமெல்லாம் அதன் கோயில்—உயிர்
உள்ளமெல்லாம் அதன் வாயில்
பலபல பேதங்கள் மாயம்—ஒன்றைப்
பார்த்திடின் சண்டைகள் ஓயும் (ஜய)

பூமியெல்லார்க்கும் பொதுவே—விளை
போகம் எல்லார்க்கும் பொதுவே—
சாமி எல்லார்க்கும் பொதுவே—சம
தர்மம் எல்லார்க்கும் பொதுவே (ஜய)

கல்வியும் வீரக் கனலும்—வீட்டைக்
காக்கத் தகுந்த தொழிலும்
நல்ல உடலும் மனமும்—பெற்று
நானிலத் தொண்டுகள் செய்வோம் (ஜய)

மலையிற் பிறக்கும் அருவி—இந்த
மண்ணுக்குப் பொன்வளமாக்கி
அலையிற் கலப்பது போலே—உள்
ளன்பிற் கலப்பது யோகம் (ஜய)

அல்லியும் தாமரை யும்போல்—இங்கே
ஆகும் இருமை விகாரம்
நல்ல சமதையி னாலே—மதி
ஞாயிறு போலநாம் வாழ்வோம் (ஜய)

## 9. கொட்டடா

(மாண்டு) (ஆதி)

ஒற்றுமை ஒற்றுமையென்று கொட்டடா—நம்
உள்ளம் அன்பு வெள்ளமென்று கொட்டடா
வெற்றி வெற்றி வெற்றியென்று கொட்டடா—ஜய
வீரசக்தி வாழ்கவென்று கொட்டடா

ஆண்மை ஆண்மை ஆண்மையென்று முன் செல்வோம்—உள்
அன்புமிக்க பெண்மை சக்தி என்னுவோம்.
கேண்மைகொண்ட தீரர் கூட்ட மாகவே—குணக்
கேடிலாது கூடியிங்கு வாழுவோம்

மனிதனுக்கு மனிதன் செய்யும் கொடுமைகள்— எல்லாம்
மண்ணைக் கௌவி விட்டவென்று கொட்டடா.
தனியகந்தை பேசிடும் அரக்கரின்—குலம்
சாய்ந்ததென்று சந்தோஷமாய்க் கொட்டடா

நமது நாடு நமது வீடென் றோதுவோம்—அதை
நமனுந் தாக்க வல்ல னில்லை என்னுவோம்.
சமரசமும் சத்தியமும் பேணுவோம்—ஆத்ம
சக்தியால் உலகவெற்றி பூணுவோம்.

அடிமை வறுமை மடமை அச்சம் வேற்றுமை—
இனி
அண்டி யிங்கு துன்புறுத்த லாகுமோ ?
கொடுமையான சட்ட திட்டம் செல்லுமோ?—
இந்தக்
குடியரசிற் குடிகளெல்லாம் அரசரே

சாதுமன் அசோகன் போலச் சாந்தமும்—வீரந்
தணலுகின்ற சிவஜி போலத் திறமையும்
நீதிகாத்த தமிழர் போலத் திண்மையும்—
கொண்டு
நிகரிலாத தீரராக நிலவுவோம்

திலகர் காந்தி அரவிந்தர் தயானந்தர்—அருட்
சிகரமா வள்ளலாரைப் போலவே—
உலகமெங்கும் ஆன்மநேயக் கொடியினை—
ஊன்றி
ஒற்றுமைக்கு ஒற்றுமைமுன் னேறுவோம்.

ஆண்டையில்லை அடிமையில்லை உலகிலே—
மாந்தர்
அனைவரும் சமானமென்று கொட்டடா
தூண்டு தீப ஜோதி போல நில்லடா—தெய்வ
ஸ்வர்க்க ராஜ்யம் வந்ததென்று சொல்லடா

## 10. புதுயுக மனிதரை

(நொண்டிச்சிந்து)

புதுயுக மனிதரைத் தா—உன்
பொன்னொளி போற்றினேன் பூரணனே
மதுமலர்ப் புன்னகையார்—அவர்
மனவிருட் கவலையை மாற்றிடுவார்
பொது நலப் புலவரவர்—நல்ல
புதுமையும் பழமையும் பொலி நடையார்
சதுரரைத் தந்திடுவாய்—இங்கே
சத்திய சேவை புரிந்திடவே (புது)

உலவிடுங் கோயிலன்னார்—உல
குயிர்தம துயிரெனும் உணர்வுடையார்
புலமைகள் பலவுடையார்—அறம்
பொருளுடன் அருளின்பப் பொலிவுடையார்,
மலையினும் மாண்புடையார்—நீல
வானினும் விரிந்தநல் லறிவுடையார்
கலியினைச் சாடிடுவார்—தெய்வக்
கனலுடையார், சக்திக் கதிருடையார் (புது)

இந்திரன் மொய்ம்புடையார்—உடல்
    இளந்திரு வளம்பெறுந் தெம்புடையார்
சந்திர சூரியர்போல்—ஒளி
    தழைத்திடும் அழகிய விழியுடையார்.
சுந்தர வாழ்வுடையார்—பர
    சூரரிப் பாரினைப் புரந்திடுவார்
செந்திரு மிகவுடையார்—தொழில்
    செய்துமுன் னேறிடுந் தகவுடையார் (புது)

குன்றெனத் தோளுடையார்—கொடுங்
    கூற்று நடுநடுங்கும் ஆற்றலுள்ளார்
வென்றிடும் வில்லுடையார்—மிக
    விழுமிய குறளெனச் சொல்லுடையார்
ஒன்றிய உள்ளுடையார்—உல
    குயிர்தம துயிரெனும் கருணையுள்ளார்
நன்றியை நினைத்திடுவார்—குண
    நாயகர் வாழிய தேயமெல்லாம் (புது)

## 11. காலை தியானம்

மங்கலக் காலை மலர்வனம் போலே
வாழ்வெலாம் அருள்மணம் கமழ்க—
செங்கதிர் வான்போல் இருளினைப் பிளந்தே
திகழுக தூயநல் லறிவே
தங்குக சாந்தம் ; தணலுக வீரம்
தழைத்தறம் பொருளுடன் இன்பம்
பொங்குக போக யோகங்க ளெல்லாம்
பூரண மாகுக உலகே !

(பூபாளம்) (சாபு)

கருணை யுள்ளம் கனிந்தெமைக் காவாய்.
கட்டி லாப்பர மானந்தக் கடலே ;
அருண சாந்தமும் ஆத்ம ஒளியும்
அறிவும் செல்வத் திருவும் அருளாய்

நேர்மை யான நினைவும் செயலும்,
நீண்டு யர்ந்து நிலாவும் புகழும்
கூர்மையான மதியும் கொடுப்பாய்—
கோயி லாக உலகினைக் கொண்டாய்

உள்ளம் ஒன்றி உயிர்க்குலம் ஒன்றி,
உலகம் ஒன்றி உயர்நல மொன்றி,
வெள்ள மாகப்பே ரின்பம் பெருக,
வீறு தந்தருள் வேத முதல்வா.

நல்ல நல்ல முயற்சிக ளாலே
நல்ல நல்ல பயன்களை நாடி,
அல்லல் போக்கி அறத்தை வளர்க்கும்
ஆத்ம சக்தி அருள்பர மாத்மா.

## 12. விரதம்

(குந்தலவராளி) (ரூபகம்)

விரதம் இன்று பூணுவோம்
விடுதலையைக் காணுவோம்
சரளமான உண்மைதன்னைச்
சாதனம்செய் தோதுவோம்.

கருமவீர ராகவே
கடமைகண்டு செய்குவோம்.
தருமத்திற் குயிரினைத்
தருவதற்குக் கூசிடோம்

மரணம் வந்த போதிலும்,
மறலியை வணங்கிடோம்.
இரணபேரி கேட்டியே
இகல்நடுங்கப் போர்செய்வோம்

காலை மாலை கூடியே
கடவுளைத் தியானிப்போம்
வேலை தன்னை ஈசனுக்கு
வேள்வியாகச் செய்குவோம்

உண்டுடுத் திருக்கவே
உழைத்து நாளும் வாழுவோம்
பெண்டுபிள்ளை சுற்றமும்
பிறந்த நாடும் ஓங்கவே.

மனிதனை மனிதனய்
மதிப்பதே மதிப்பதாம்,
இனிதொரு குலமென
இலகுமன்பு வீரர்காள்! (விரதம்)

## 13. அந்தி வணக்கம்

(பந்துவராளி) (ரூபகம்)

அந்தி மாலையில்
அழகன் வந்தனன்
சிந்தை குவிந்தே
தியானம் செய்குவோம்.

செம்பொன் வானத்தில்—
திகழும் சாந்தமே,
எம்பொன் னுள்ளத்தில்
இலகி யோங்குவாய் !

முல்லைத் தென்றலில்—
முரளி கானம் செய்
நல்லிசைக்கவி
நாத சித்தனே !

ஏக ரசனும்
இதய யோகியே—

தியாக சேவையால்
தினமும் பூசிப்போம்

மதியுடன் செல்லும்
வான மீன்கள்போல்
கதியுடன் செல்லும்
துதியிசை யைப்போல்

பரமனே உன்னைப்
பற்றி வாழ்ந்திடும்
வரமெமக்கருள்
வரம்பில் இன்பமே !

## 14· கனவு

(சிந்துபைரவி) (ஆதி)

நினைவு வந்ததுமுதல்
நின்னை நினைந்துருகும்
கனவு பலித்திடவே—பரமா
காட்சி யெனக்கருள்வாய்

இயற்கையின் உள்ளத்தில்
    இலகுமுன் அழகையே
செயற்கை யுலகினிலே—பரமா
    தேடித் திரிந்தே னப்பா.

மலையரு வியைப்போலே
    வளருமுன் இன்பத்தைக்
கலையின் அருவியிலே—பரமா
    காணத் தவம் புரிந்தேன்.

சொல்லாச் செயல்புரியும்
    சூரிய சந்திரர்போல்
அல்லும் பகலுமிங்கே—பரமா
    அருட்பணி செய்யவருள்.

எங்கும் விரிந்திருக்கும்
    எல்லையில் வானம்போல்
இங்காத்ம நேயத்திலே—பரமா
    எல்லாரும் வாழியவே.

## 15. தலை நிமிர்க

(மாண்டு) (ஏகதாளம்)

தலைநிமிர்க தலைநிமிர்க
தலைநிமிர்க மானிடர்
மலைநிமிர்ந்த சிகரம்போல
வானுயர்ந்த ஞானத்தால்

கலைகுலுங்கக் கடவுளன்புக்
கவிமலர் குலுங்கவே (த)

நிலைகலங்கிக் கவலைவீழ
நிகரில் இன்பம் சூழவே (த)

வலைவிரிக்கும் வஞ்சப் பொய்கள்
வாழ்விழந்து போகவே (த)

கொலைதவிர்த்துக் கோள்தவிர்த்து
கொடுமையின்றிக் குலவியே (த)

மடமை யின்றி வறுமையின்றி
மல்கு கல்வி செல்வத்தால் (த)

கடமையென்று பொதுநலத்தைக்
காக்கும் வீர தீரராய் (து)

உடலுயிர் பொருளை அன்பின்
உரிமை யாக்கிப் பெருமையாய் (து)

கடவுளைக் கலந்து வேறு
கட்டிலாத தூயராய்த் (து)

## 16. உறங்காதீர்

(செஞ்சுருட்டி) (ரூபகம்)

இன்னும் உறங்குவதோ—இந்த
ஈன இருள் நரகில் ...
அன்னிய மோகவலை—தன்னை
அறுத் தெழுந்திருப்பீர் (இன்)

இந்தப்பொன் னாட்டினிலே—ஐயோ
எத்தனை வேற்றுமைகள்
வந்தவர் போனவரும்—இதன்
வளத்தைச் சுரண்டுகின்றார் (இன்)

நீடு தவம் புரிந்தே—வேத
நீதியைத் தந்த நல்லோர்
ஏடுகள் செல்லரிக்க—ஞானம்
இன்னதென்றே யறியார் (இன்)

சத்தியத்தை மறந்தார்—பல
சாதிகளாய்ப் பிரிந்தார்
சுத்தனையே நினையார்—மதச்
சுழலிற் சிக்குகின்ருர் (இன்)

கல்லை வணங்கிடுவார்—நரர்
காலை வணங்கிடுவார்
சொல்லை மழுப்பிடுவார்—வெறுந்
தோலை அலங்கரிப்பார்... (இன்)

தொண்டர் செழித்தநிலம்—வீர
சூரர் செழித்த நிலம்
குண்டர் கொடுமையினுல்——ஐயோ
குத்துண்டு சாகுதம்மா... (இன்)

## 17. காலக் கொடுமை

(மோகனம்) (ஜம்பை)

காலக் கொடுமையைப் பாரடா—அதன்
கட்டைப் பிளந்திட வீறடா.
போலிப் பதர்களை வீழ்த்தடா—நல்ல
புதுயுக வாழ்க்கையை வாழ்த்தடா.

ஆயிரம் ஆயிரம் சாமிகள்—பதி
ஞயிரம் ஆயிரம் சாதிகள்
ஓயாத சாத்திரச் சண்டைகள்—எல்லாம்
ஊரைக் கெடுத்திடக் கண்டனம்...

சித்தம் தெளியாத பித்தர்கள்—மதச்
சேகண்டி கொட்டிடும் எத்தர்கள்
பக்தி யறியாத பண்டிதர்—பழம்
பாட்டி கதைபேசும் பாமரர்

சாத்திர கோத்திரம் பேசியே—வீண்
சண்டை வளர்க்கும் சமயங்கள்
நாத்திகர்செய் நகைக் கூத்துகள்—போலி
நாகரிகப் பித்த லாட்டங்கள்

எத்தனை எத்தனை மோசடி—ஐயோ
எங்குமே வஞ்சரின் காசடி
எத்தனை அரசியற் சூழ்ச்சிகள்—ஐயோ
எத்தனை மன்னரின் வீழ்ச்சிகள் !

பூத ரசாயன யந்திரம்—எல்லாம்
போரை வளர்த்திடும் தந்திரம்
பாதகர் அரசியல் உலகிலே—நாளும்
பற்றவைக் கின்றனர் கலகமே

படுத்தவர் பாயைப் பறிக்கிறார்—புண்
பட்டவர் வீட்டை யெரிக்கிறார்
அடுத்தவரைக் கொள்ளை யடிக்கிறார்—ஐயோ
அணுகுண்டு போட்டு மடிக்கிறார்

கூழுக்குக் கூக்குரல் ஓர்புறம்—குடி
கூத்தி யிடம்பமும் ஓர்புறம்
வாளுக்குக் கொண்டாட்டம் ஓர்புறம்—உயிர்
வாழ்வுக்குத் திண்டாட்டம் ஓர்புறம்

கஞ்சப் பணக்காரர் கொள்ளையும்—கடுங்
கள்ளச் சந்தைக்காரர் கொள்ளையும்,

பஞ்சப் பிணக்குவை நாற்றமும்—எங்கும்
பட்டினிப் பட்டாள வாட்டமும்

பொய்கட்டும் ஒற்றர்கள் ஓர்புறம்—புகழ்
போற்றிடத் தூற்றுவோர் ஓர்புறம்
பைகட்டும் பேராசை யோர்புறம் — லஞ்சப்
படுமோசக் கொடுமைகள் ஓர்புறம்

மேற்கென்றும் கிழக்கென்றும் வடக்கென்றும்—
வளர்
மேட்டிமைப் பித்தங்கள் எத்தனை ?
ஏற்காத வேற்றுமை எத்தனை—இன்னும்
எண்ண முடியாதிங் கின்னல்கள் !

என்றித் துயரங்கள் தீருமோ—உல
கெல்லாம் ஒருங்கேமுன் னேறுமோ
என்று கலியுகம் மாறுமோ—இனி
என்றன் மனக்கொதிப் பாறுமோ ?

## 18. வாருங்கள் தோழர்களே

(செஞ்சுருட்டி) (ஏகதாளம்)

வாருங்கள் தோழர்களே—அன்பும்
வாய்மையுந் தூய்மையுஞ்
சீர்மையும் கொண்டிங்கே
சேருங்கள் தோழர்களே—வீரச்
சிங்கங்கள் போலச்
சிரங்கள் உயர்த்திமுன்
பாருங்கள் தோழர்களே—இந்தப்
பாருயிர் ஒருயிர் என்னும் ஒருமையைத்
தேருங்கள் தோழர்களே—சொல்லும்
செய்கையும்கூடிய சேமப் படையென (வா)

கண்கள் இரண்டெனவே—வீரக்
காதலர் தூய கருத்தொன்றி வாழவே
பெண்கள் மனங்குளிர—பழம்
பேய்களும் நோய்களும் பீடித்து வாட்டிய
புண்களைப் போக்கிடுவோம்—எப்
போதும் சுதந்தரப் புன்னகை பொங்கிட
மண்மிசை யின்புறுவோம்—புது
வானத் தமுதினை ஞானத்தினு லுண்போம்
(வா)

தேயநலம் புரிவோம்—பர
தெய்வத்தை வையத் துயிர்களிற்
காணுவோம்
தாயின் கொடி பிடிப்போம்—மதச்
சண்டைக்குச் சாவு மணியடிப்போம்—ஆன்ம
நேயம் வளர்த்திடுவோம்—தூய
நெஞ்சொருமித்து நிறைந்த சுதந்தரக்
கோயிலிற் கூடிடுவோம்—அன்பு
கொண்டருளாட்சி குலவிடவே—இங்கு (வா)

## 19. கொட்டுங்கள்

(புன்னாகவராளி) (திஸ்ரஏகம்)

கொட்டுங்கள் வார் முரசம்—பழங்
குப்பை யொழிந்து கொழுத்தது கற்பகம்,
கட்டுகளை யுடைத்தோம்—எதிர்
காலத்தைத் தாண்டிடும்
பாலத்தைக் கண்டனம்
எட்டிமுன் சென்றிடுவோம்—அடல்
ஏறென வீறுட னேபுது மாறுதல்

பெற்றுல காண்டிடுவோம்—பழம்
　　பேடிமையைக் குழி தோண்டிப் புதைத்
　　　　　　　　　　　　　தனம் (கொ)

துன்பச் சுமைகளெல்லாம்—நிர்த்
　　தூளிபட் டோயச் சுதந்தர பூமியில்
இன்பப் பயிர் வளர்ப்போம்—நாம்
　　எல்லாரும் ஒன்ருகி நல்ல கனியுண்போம்
அன்பினுக் கன்பு செய்வோம்—உயிர்
　　ஆகிய உண்மைக் குயிர் தருவோம்—புதுப்
பண்புறு நண்பரெல்லாம்—முன்னே
　　பாயு மருவிபோ லேயிசை பாடியே (கொ)

சள்ளைசெய் ராக்ஷஸர்கள்—தெய்வ
　　சக்திக் கனல்பட்டுச் செத்து விழுந்தனர்.
துள்ளிக் குதித்திடுவோம்—ஐய
　　துந்துமி யெங்கு முழங்கச் சுதந்தர
வெள்ளத்தி லாடிடுவோம்—மன
　　வேற்றுமை யால் வந்த நேற்று மதங்களைத்
தள்ளி யொதுக்கிடுவோம்—சுத்த
　　சன்மார்க்க நீதி தழைத்திடப் பாரெங்கும்
　　　　　　　　　　　　　(கொ)

## 20. உலகமெல்லாம்

(காவடிச் சிந்து)

உலக மெல்லாம் சமரஸ பேரிகை
ஓங்குதே—கலி—நீங்குதே
கலக மின்றிக் கலந்திடுங் காலமுங்
காணுதே—நலந்—தோணுதே

சாதி பேத சமய வெறிமிகத்
தாழுதே—பொய்—வீழுதே
நீதி யற்ற வகுப்பு விஷத்திமிர்
நீறுதே—மனம்—மாறுதே

வலை விரித்திடும் வஞ்சகச் சூழ்ச்சியும்
வாடுதே—அச்சம்—ஓடுதே
தலைநிமிர்ந்து சகோதர ஒற்றுமை
தாங்குதே—புகழ்—யாங்குமே

வீடெலாம் அறி வோங்கும் விளக்கொளி
வீசுவோம்—உண்மை—பேசுவோம்
நாடெலாம் தொழிற் சாலை நலமுற
நாட்டுவோம்—சோம்ப—லோட்டுவோம்

தாந்தமதெனும் தன்னலப் பேய்களைத்
    தாக்குவோம்—துயர்—போக்குவோம்
மாந்த ரெல்லாம் ஒருகுலத் தோழராய்
    வாழுவோம்—நன்மை—சூழுவோம்

வீரம் வீரமென் றேசக்தி வீறிட
    வெல்லுவோம்—இடர்—கெல்லுவோம்
கோர மாகிய கூற்றையு மண்டையிற்
    குட்டுவோம்—கச்சை—கட்டுவோம்

## 21. அகில பாரதத்தில்

(*கல்யாணி*) (*ரூபகம்*)

அகில பாரதத்தில் வாழும்
    யாவரும் சமானமே—
  ஆரியர் திராவிடர் இஸ்லாமியர் கிறிஸ்துவர்
பகைமை யச்சம் அடிமை மடமை
    பந்த தொந்த மின்றியே
பரமசக்தி மைந்த ராக
    உரிமை கொண்டு வாழுவோம் (அகி)

எல்லாம் ப்ரம்மம் என்று ரைக்கும்
இந்து தர்ம வேதமே
இறைவனே பெரியன் என்னும்
இஸ்லாமிய வேதமே
நல்ல கருணை பொறுமை யன்பை
நாடிடும் கிறிஸ்துவம்
அல்லல் போக்கி அமர வாழ்வை
ஆக்கும் சுத்த யோகமே (அகி)

மாரி தென்றல் சூரியன்போல்
மலை யருவி போலவே,
ஓரக மில்லாது நாம்
உதவி செய்து வாழலாம்.
பேர்வடிவ பேத மெல்லாம்
ஓர்பொருளின் போர்வையே
ஆருயிருள் அறிவுத் தேவை
அன்பினால் வணங்குவோமே (அகி)

## 22. சந்தோஷச் செய்தி

(புன்னாகவராளி) (மிச்ரஏகம்)

சந்தோஷச் செய்தி யண்ணே—இனிச்
    சாதிமதநிறப் பேதமில்லை
பந்தந் தொலைந்ததண்ணே—சக்தி
    பாரத தேவி மணிவயிற்றில்
வந்த தவப்புதல்வர்—இங்கே
    வாழுவோம் ஓர்குலத் தோழர்களாய்
சிந்தை சிவத்தினிலே—வைத்துச்
    செய்வோம் பொதுநலச் சேவைகளை...

தாய்நாட்டைப் பாழ்படுத்திப்—பல
    சண்டைகள் மூட்டிய பண்டைவினைப்
பேயோடிப் போச்சுதடா—மூடப்
    பித்துகள் அற்றன சத்தியத்தால்
வாய்மூடிப் போனதடா—அண்ணே
    வாதவகுப்புக் கலகச்சனி
ஆயா உலகன்னை—அவள்
    அன்புநாம் கும்பிடும் ஆலயமே

பாடுவோம் தோழர்களே—இந்தப்
பாரெல்லாம் ஆனந்தத் தேறலென்றே
ஆடுவோம் வட்டமிட்டே—இங்கே
ஆண்டவனன்றி அடிமையில்லை
சாடுவோம் வேற்றுமையை—சுத்த
சன்மார்க்க ஒற்றுமைச் சங்கொலிப்போம்
நாடுவோம் ஞானமலை—அங்கே
நாமன்றி வேறில்லை ஞாலமெல்லாம்

## 23. நந்தனார் வந்தகுலம்

(நொண்டிச்சிந்து)

நந்தனார் வந்தகுலம்—ஹரி
நாமஞ்சொல் பாணனைத் தந்தகுலம்
இந்திய நாட்டினிலே—இனி
இழிகுலம் என்கிற பழியு முண்டோ?
அந்தணர் வீதியிலே—நாமும்
அடுத்தடுத் திருப்பதைத் தடுப்பவர் யார்?
மந்திரம் புகுந்தொருவர்—தம்
மனப்படி தொழுவதைத் சினப்பவர் யார்?

வானமும் சூரியனும்—ஒரு
வகுப்பினுக் குதவவே வருவதுண்டோ ?
தேன்மலர்ச் சோலைகளும்—தொழில்
செய்பவர் குலப்படி செழிப்பதுண்டோ ?
ஈனர்கள் யாருமில்லை—சாதி
இனச்செருக் கெழுந்தது மனச் செருக்கால்
மானிடர் ஓர் குலமே—இந்த
மண்புவி யாருக்கும் பொதுநிலமே } (நந்த)

பாரினில் வளமையுண்டு—நாம்
பாடுபட் டுண்டிட உரிமையுண்டு
யாரினித் தீண்டாதார்—அண்ணே
எவரினித் தாழ்ந்திடும் ஏழைகளே ;
ஊரினில் உள்ளவர்கள்—பூவில்
உலவிடும் வண்டென நிலவிடுவோம்.
காரினில் மின்னலைப்போல்—அந்தக்
கரணத்திற் கடவுளைக் கலந்திடுவோம்.

## 24. ஆனந்தர் உபதேசம்

*(புன்னுகவராளி)* (ஆதி)

அருட்கட லாகிய புத்த பெருமான்—சீடன்
ஆனந்தன் அறஞ்சொல்லப் போகும் வழியே
திருக்குலப் பெண்ணொருத்தி தண்ணீர்
இறைத்தாள்—"தாகந்
தீரநீர் வார்த்தி" டெனச் செங்கை விரித்தான்

*பெண்*

"தேவகுலச் சாமி யல்லோ நீங்கள் அடியேன்—சிறு
தீண்டாத சாதியன்றோ தீர்த்தம் அளித்தால்,
ஆவது தோடம்" என்றாள் ; அருளுடனே-நோக்கி
ஆனந்தன் புன்னகையோ டன்பு மொழிந்தான்:

*ஆனந்தர்*

"தாகம் பசிக்கு மொரு சாதியுமுண்டோ?—இந்தத்
தண்ணீருக்குங் கிணற்றிற்கும் சாதிக ளுண்டோ?
தாகந் தணியத் தண்ணீர் தந்துதவம்மா !—உன்
சாதிகுலம் கேட்கவில்லை ; நீதியறிவேன்"

"அதுசரி" யென்றறிவை அள்ளியளித்த —நீரை
ஆவலாய்ப் பருகியே அந்தணன் சொன்னான் :
"பொது நலப் புண்ணியமே கண்ணியமம்மா—
மாந்தர்
புனைந்திடுங் குலமெல்லாம் புத்தி மயக்காம்

செல்லரித்துப் போனபழந் தீமையொதுக்கிப்-புதுச்
சீர்மையுடன் வாழ்வோ"மெனச் சீலனகன்றான்.
நல்லபுத்தி வந்ததென்று நங்கைமகிழ்ந்தே-புத்த
ஞாயிறைச் சரணென நம்பி யடைந்தாள்

## 25. கோயிலும் சாமியும்

மணியொலி கேட்டேன் ! வாத்தியங் கேட்டேன் !
கோபுரங் கண்டேன் ! கோயிலென் றேடினேன் !
அரஹர வென்றனர், ஆடினார், பாடினார்,
குடங்குட மாகக் கொட்டினார் பாலை ;
பொன்னணி பூட்டினார் பூக்களைச் சொரிந்தார்.
"எங்கும் கடவுள், எல்லாம் கடவுள்,
சாமிக் கெல்லாம் சம" மெனச் சொல்லி,
வேதம் பாடினர் ; கீதம் பாடினர்

நட்ட கல்லைச் சுற்றியிந் நாடகம் !
"நாமும் மனிதர் !
நாமும் அன்பர் !"
என்று வெளியே எண்ணிலாச் சகோதரர்
முறையிடக் கேட்டேன், முடுகினேன் ஆங்கே ;
"தொடாதே" என்று துரத்தினர் சிலரை ;
"தீண்டாதே" எனத் திட்டினர் சிலரை ;
"வேறு மத" மென வெறுத்தனர் சிலரை;

திரும்பிப் பார்த்தேன் :

பணத்தைக் கண்டேன் ; பத்தியைக் காணேன்.
சடங்குகள் கண்டேன் ; சத்தியங் காணேன்.
சாதியைக் கண்டேன், சாமியைக் காணேன்.
குருக்களைக் கண்டேன், கோயிலைக் காணேன்.
எங்கே கோயில் ? எங்கே சாமி ?
"நானே கோயில்" என்றது வான்புவி
"நானே சந்நிதி" யென்றது நெஞ்சே
"நானே சாமி" என்றதொன் றுள்ளே
ஆம், ஆம் !
உடலேகோயில்; உயிர்க்குயிர் சாமியே

## 26. அந்தணர் யார்?

[புத்தர் ஓர் அக்கிரகாரத்தில் பிச்சைக்கு வருகிறார். அங்கே வேள்வி நடக்கிறது. அந்தணர், நீ வேதத்தை நிந்திப்பவன்; அந்தணர் தெருவில் வரலாகாது. போ, போ!" என்று விரட்டுகின்றனர்.]

(மோகனம்) (சாபு)

அந்தணர்

தீதில் அந்தணர் வேள்விகள் செய்யும்
தெருவை நாத்திகர் தீண்டிடப் போமோ?
போதி சத்துவ, போபோ திரும்பி.....!
போட்டி டோம் பிச்சை.....ஓட்டி யடிப்போம்!

புத்தர்

ஆட்டை மந்திரஞ் சொல்லி யறுத்தே,
அனலில் வாட்டி அவியுண்டு மோட்ச
வீட்டைப் பார்த்திடும் வேதியர் அல்லர்
வேதத்தை வெறு மொந்தை யுருவாய்ப்

போட்டுக் கூவும் புலவரும் அல்லர்;
பொய்யொழுக் கங்கள் பூண்டவர் அல்லர்
திட்டு, திட்டெனத் திட்டுவோர் அல்லர்
திட்டி தோடங்கள் செப்புவோ ரல்லர்.

இன்பமே யெண்ணி, இன்பம் இயற்றி
இனிமை யேசொல்லி யெவ்வுயி ருக்கும்
அன்பு பூண்டவர் அந்தணர் ஆவர்;
ஆத்ம தீரர்கள் அந்தணர் ஆவர்.

ஆசைக் கோபம் அகந்தை தவிர்த்தே,
அரு ளமைதி அஹிம்ஸை, பொறுமை,
நேசம், உண்மை, நிலவுஞ் சமதை—
நேர்மை யந்தணர் சீர்மை யிவையாம்......

எவ்வுயி ரையுந் தம்முயிர் போலே
எண்ணி நன்மைசெய் புண்ணியர் யாவர்
அவ்வு யர்திரு வாளரை நல்லோர்
அந்த ணர்என் றறிகுவ ரன்றே !

## 27. வள்ளுவரின் தெள்ளமுதை

(கர்நாடக தேவகாந்தாரி) (திஸ்ர ஏகம்)

வள்ளுவரின் தெள்ளமுதை
வாரி யுண்போமே—நம்
உள்ள மெல்லாம் அன்புவெள்ளம்
ஓடக் காண்போமே—

அகரவுயிர் போல் விளங்கும்
ஆதி பகவன்—ஞானச்
சிகரஜோதி யாய் அவனைச்
சிந்தை செய்வோமே.

நல்லறமாம் இல்லறத்தே
நயந்து வாழ்வோமே—நல்ல
செல்வமெனும் செல்வருடன்
செழிப்ப டைவோமே.

ஊன்மதுவும் பொய்களவும்
உடனொழிப்போமே—அருள்
வானமென்ன ஈகையிலே
மகிழ்ச்சி கொள்வோமே.

துஞ்சாத முயற்சியுடன்
தொழில் புரிவோமே—நாம்
அஞ்சாத நெஞ்சுடனே
அறம் வளர்ப்போமே

மனத்தினிலே தூய்மையுடன்
வாய்மை காப்பமே—மாந்தர்
இனத்தினையே அமரநிலைக்
கேற்றிவைப்போமே

## 28. அல்லா பொது

(கரஹரப்ரியா) (ஆதி)

அல்லா பொதுவே அரனும் பொதுவே
எல்லா ருக்கும் இறைவன் பொதுவே

பொல்லாருக்கும் நல்லாருக்கும்
கல்லா ருக்கும் வல்லாருக்கும் (அல்)

உயிர்புண் பட்டால் உயிருக் குயிராம்
உயிர்கூத் தான்மா துயரப் படுமே (அல்)

தொட்டுப் பார்த்தால் ஒட்டும் உறவே
எட்டுத் திசைவான் வட்டம் ஒன்றே (அல்)

நேசர் வாழும் தேசம் ஒன்றே
பாசம் ஒன்றே பரிவும் ஒன்றே (அல்)

வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும்
சுடரும் கதிரும் சுழலும் காற்றும் (அல்)

கடலும் மலையும் கருணை நதியும்
அடரும் வனமும் அகமும் புறமும் (அல்)

உலகில் எல்லாம் ஒன்றின் பண்மை
கலகம் வேண்டாம் கருதீர் நன்மை (அல்)

## 29. தன்னை முன்

(காமாஸ்) (ரூபகம்)

தன்னைமுன் அறிந்தவன்
சகவியல் புணர்ந்தவன்
அன்னையன்பு கொண்டவன்
அவன் பெரிய வீரனே—

உலகமே எதிர்க்கினும்
உறுதிகொண்ட உண்மையை,
நலமுறப் புரிபவன்
நலிவிலாத வீரனே

இன்னல் வந்த போதிலும்
இகழ்ச்சி வந்த போதிலும்
புன்னகைப் பொறுமை காட்டிப்
புண்ணியம் புரிவனே

முதுநலம் சிறக்கவே
முயற்சி செய்து நாட்டிலே
புது நலம் சிறக்கவே
பொதுநலம் புரிகுவான்

கொடுமையைக் குமைத்திடக்
குதித்துமுன் சமர் செய்வான்
கடும்பகைவர் மோதினும்
கலங்கிடாது வெல்லுவான்

ஈரமான நெஞ்சினன்
இரக்கமிக்க ஈகையான்
சார மான சொல்லினன் ✓
சமரஸ விழியினன்

## 30. வேலை செய்து

(மோகனம்) (ஆதி)

வேலை செய்து பிழையார்—சும்மா
விண்ணைப் பார்த்து நிற்பார்
போலி மனிதர் காலம்—ஒழிந்து
போன தென்று சொல்வோம்

தெய்வ நிந்தை செய்வார்—சு
தேச நிந்தை செய்வார்
பொய்யகந்தை வெறியால்—நல்ல
புனிதரை யிகழ்வார்

பேய்பிசாசு பில்லி—என்றே
பேடி யச்சம் கொள்வார்.
வாய்ப்பந்தலின் கீழே—உயர்
வைகுண்டத்தைக் காண்பார்

புதிய யந்திரங்கள்—செய்யும்
புலமை வேண்டும் என்றால்,
முதிய சங்க ஏட்டைத்—திருப்பி
மூன்று செய்யுள் படிப்பார்

உள்ளுணர்வு மின்றி—உண்மை
ஒழுக்கங் காத்த லின்றி
எள்ளுந் தண்ணீர் விட்டே—ஐயா
எங்கள் சமயம் என்பார்

மக்கள் பஞ்சத்தாலே—தெருவில்
மடிந்து போகக் கண்டும்,
சொக்கத் தங்கப் பைக்குத்—தீப
தூபங் காட்டித் தொழுவார்

## 31. மாறிட வேண்டும்

(உசேனி) (ஆதி)

மாறிட வேண்டுமையே—இந்த
மானிடர் இயற்கையெல்லாம்
வீறிடும் சுயநலத்தை—அவர்
வென்றிட வேண்டுமையே (மாறி)

வெடிபுயலிடி வெறிகள்—வெளி
வேடங்கள் வஞ்சனைகள்
தடபுடல் நாடகங்கள்—கடுந்
தந்திரத் தீப்பொறிகள் (மாறி)

உள்ளத்திலே பகையும்—சாய
உதட்டினி லேநகையும்
கள்ளத்துடன் கலந்த—பல
காரியச் சூதுகளும் (மாறி)

முத்தெனப் பேசிடுவார்—பின்னே
முடிச்சவிழ்த் தோடிடுவார்
சொத்து சுகமிருந்தால்—தினம்
சுரண்டிடச் சுற்றிடுவார் (மாறி)

கப்பலைக் கட்டிடுவார்—காந்தக்
கண்ணியும் போட்டிடுவார்
முப்புர ராக்ஷஸர்போல்—அனல்
மூட்டிநல் லூரழிப்பார் (மாறி)

நமனுடன் கைகுலுக்கி—மகா
நாடென விருந்தளிப்பார்
அமைதிகள் பேசிடுவார்—பின்னே
அணுவெடி வீசிடுவார் (மாறி)

யந்திரப் பொருள் குவிப்பார்—மிக
எளியவர் நாடுகளைச்
சந்தையென வளைப்பார்—வம்புச்
சண்டைக் கிழுத் தலைப்பார் (மாறி)

முடியர சாட்சி கண்டோம்—குடி
முறையர சாட்சி கண்டோம்
தடியர சாட்சியெல்லாம்—போர்த்
தம்பட்டம் அரசியலே (மாறி)

தீர்க்க தரிசிகளும்—சன்
மார்க்க தரிசிகளும்
போர்க்கள மின்றிவளர்—புதுப்
புவியினைக் கண்டிலரே (மாறி)

கோழிச்சண்டை முதலே—பெருங்
குண்டுச்சண்டை வரைக்கும்
ஏழை யுலகுயிரை—அந்தோ
எமபுரம் அனுப்புவதேன்? (மாறி)

## 32. தியாகம்

(பிலகரி) (ரூபகம்)

மண்வளமை செழிக்கத்—தன்னை
வாரி வழங்குகின்ற
தண்முகில் வானத்தைப்போல்—தியாக
சாதனம் செய்திடுவோம்....

ஊட்டிப் பயிர்நிலத்தை—வாழும்
உயிர்களுக் குதவிப்
பாட்டுடன் ஓடுகின்ற—நதியெனப்
பாரில் உலாவிடுவோம்.

மதுவை வண்டருந்தத்—தன்
மணத்தைக் காற்றருந்தப்
புதுநகை புரியும்—காலைப்
பூவினைப் போலிருப்போம்.

நீண்டதிரி குறைந்தும்—தனது
நெய்வளமை குறைந்தும்,
தூண்டு சுடரினைப்போல்—அருள்
தொண்டினில் இன்புறுவோம்

வெட்டும் மனிதருக்கும்—கனி
விருந்துந் தண்ணிழலும்......
தட்டின்றித் தந்துதவும்—மரம்போல்
தருமஞ் செய்திடுவோம்.

காரிருட் காட்டினிலே—வழி
காட்டி மினுக்கியபின்,
சூரிய னுள்மறையும்—நட்சத்திரச்
சுடரெனப் பொலிவோம்.

இன்னல் அளித்தாலும்—தான்
ஈன்ற குழந்தையினை
அன்னை வளர்ப்பதுபோல்—நாம்
அன்பை வளர்த்திடுவோம்.

## 33. உலகம்

(செஞ்சுருட்டி) (ஆதி)

எல்லையற்ற வானம்—மழை
என்னும் பாலை யூட்டிப்
பல்வளங் குலுங்க—வளர்க்கும்
பச்சைக் குழந்தை உலகம்
தாயின் அன்பினாலே—பர
சக்தி ஆளும் உலகை
மாயை யென்னலாமோ ?—ஜீவ
மந்திரத்தை மதிப்போம்

காற்றுடன் கதிரும்—ஆழக்
கடலும் ஆறு மலையும்
போற்றுகின்ற உலகே—பரம்
பொருளின் ஆடரங்கம்
எழில் உலாவும் உலகம்—எங்கும்
இயற்கை சூழும் உலகம்
அழகு சொட்டும் உலகம்—இதில்
ஆனந்தத்தைக் காண்போம்

## 34. உள மலர்ச்சி

(செஞ்சுருட்டி) (ஏகம்)

மலையருவி யைப்போல்—வாழும்
வகை யறிந்துவிட்டால்
கலையருவி யிலே—வாழ்வின்
கனவு சொக்குமம்மா!

கொஞ்சும் பசுங்கிளிபோல்—மழலை
கொட்டுங் குழந்தையைப்போல்,
வஞ்சமில்லா திருந்தால்—உலகம்
வானக மாகுமம்மா!

அருணனைப் போலே—உள்ளம்
அமைதி கண்டுவிட்டால்,
வருணனைக் கெட்டாப்—பேரின்ப
வளமை பொங்குமம்மா!

## 35. ஒன்றே உலகம்

ஒன்றே பரம் பொருளும்,
ஒன்றே உயிர்க் குலமும்:
ஒன்றேயிவ் வானுலகும்:
உண்மை யறிவீரே

காற்றுங் கதிருங்
கடலும் கரும்புயலும்
போற்றும் உலகம்
பொதுவென் றறிவீரே !

வெள்ளை கறுப்பென்ற
வேற்றுமைக ளில்லாமல்,
உள்ளன்பு கொண்டு மக்கள்
ஒற்றுமையாய் வாழ்வீரே

ஆயுதங்கள் காட்டி
அடிமைப் படுத்தாது,
நேயத்தி லோங்கி
நிலைபெற்று வாழ்வீரே !

## 36. ஒருகுல உணர்ச்சி

(பிலகரி) (ரூபகம்)

உலகமெல்லாம் ஒருகுலமாய்—வாழுவோம் !
உள்ளமொன்றி ஒற்றுமையை—நாடுவோம் !
கலகமில்லை, கட்சியில்லை—யாவரும்
கருமவீர ராகத் தொண்டு—செய்குவோம் ! (உலக)

எல்லையற்ற வான்குடையி—னிழலிலே,
இருசுடருந் தருமியற்கை—ஒளியிலே,
பல்லுயிர்க்கும் பாய்ந்துநல்கும்—காற்றிலே
பார்த்ததில்லை ஓரகத்தின்—சாயலே (உலக)

அன்பருளை ஓதிடாத—மதமுண்டோ ?
அறிவொளியைப் போற்றிடாத—மதமுண்டோ ?
இன்பம் வேண்டி முயன்றிடாத—மதமுண்டோ ?
எவ்வுயிர்க்கும் இன்னல் வேண்டு—மதமுண்டோ?
(உலக)

மனிதருள் மனிதனை—யறிகுவோம்,
மனவிகாரத்தையெடுத்—தெறிகுவோம்,
அனைவருக்கும் பொதுநலங்கள்—ஆற்றுவோம் ;
அச்சமற்ற சுதந்தரத்தைப்—போற்றுவோம்! (உலக)

பெயர்வடிவ பேதமாயை—நீத்தவர்,
பிரிவினையற் றுலகை ஒன்ருய்ப்—பார்த்தவர்,
உயர்பொருளை உயிர்க்குயிராய்க்—கண்டவர்
உள்ளமன்பு வெள்ளமாகும்—உணருவீர்! **(உலக)**

## 37. மேற்கும் கிழக்கும்

(*மாண்டு*) (ஜம்பை)

சக்தி வளர்வது மேற்கினிலே—ஆத்ம
சாந்தம் வளரும் கிழக்கினிலே
சக்தியுடன் ஆத்ம சாந்தமும் கூடிஞல்,
சண்டைக் கிடமில்லை எண்டிசையும்

கத்தி வளர்வது மேற்கினிலே—நெஞ்சக்
கருணை வளரும் கிழக்கினிலே
கத்தியின்றிக் கொலை ரத்தமின்றி அன்புக்
கருணையில் வாழ்வோம் கவலையின்றி

உலகறி வோங்கிடும் மேற்கினிலே—நல்ல
உள்ளறி வோங்கும் கிழக்கினிலே
உலகமும் உள்ளமும் ஒன்றுபட்டால்,-இன்பம்
ஓங்கிடும் வேற்றுமை நீங்கிடுமே !

ஞானம் பொலியும் கிழக்கினிலே—விஞ்
ஞானம் விரிந்தது மேற்கினிலே
வானமும் பூமியும் போலிரண்டுங்—கூடி
வாழ்ந்திடின் இன்பம் வளர்ந்திடுமே

போகம் வளர்வது மேற்கினிலே—சுத்த
யோகம் வளரும் கிழக்கினிலே ;
போகமும் யோகமும் பொருந்தும் வாழ்க்கையே
பூரண வாழ்வெனப் போற்றுவமே !

## 38. புரட்சி செய் மனிதா

(மாண்டு) (ஜம்பை)

*பல்லவி*

புரட்சி செய் மனிதா—வீரப்
புரட்சி செய் மனிதா (புரட்சி)

*அனுபல்லவி*

திரட்சி யான தோள்கள் உண்டு
திண்மையுண்டு உண்மையுண்டு (புரட்சி)

*சரணங்கள்*

சாதி பேத வாதத் திற்குச்
சாவு மணியை அடித்து முடித்து
நீதி யான சத்தியத்தில்
நிலவுலகம் ஒத்து வாழப் (புரட்சி)

கண்ணிரண்டு போலக் கூடிக்
காதலர் களித்து வாழப்
பெண்ணடிமைப் பேயை வீழ்த்திப்
பெண்மை சக்தி யென்று வாழ்த்திப் (புரட்சி)

அழிக வறுமை மடமை நோய்கள்
அடிமை செய்யும் வலிய பேய்கள்
செழிக கல்வி செல்வத் தொழில்கள்
சேமமாகப் பூமி யெல்லாம் (புரட்சி)

பாடுபட்டு வேலை செய்து
பலனையுண்டு பொது நலத்தில்
ஈடுபட்டுக் கூடி வாழும்
இன்பமெங்கும் பொங்கிப் பொலியப் (புரட்சி)

உலகமெல்லாம் தேசமாக
உயிர்களெல்லாம் ஒருமையாகக்
கலகமற்ற மெய் விழியிற்
கட்டில்லாது கருணையோங்கப்
புரட்சி செய் மனிதா

## 39. நாகரிகம் பெறு

*(ஹிந்துஸ்தான் தோடி)* (ஆதி)

*பல்லவி*

நாகரிகம் பெறு மனிதா
ஞாலத்தையும் நிகழ் காலத்தையும் அறிந்தே
(நாக)

*அனுபல்லவி*

மோகவெறிகளின் வேகத்தை யடக்கி
மூர்க்கப்பொறுமையின்
போக்கினை மடக்கி

(நாக)

*சரணங்கள்*

பண்புறு கலைகளை இன்புறத் தாங்காய்
பஞ்சமா பாதக வஞ்சனை நீங்காய்
புண்படு பகையற நண்பொடு பழகாய்
புண்ணியப் பொதுநலம்
பண்ணிடு அழகாய் (நாக)

காணிக்கும் பொன்னுக்குங் கலகமூட்டாதே
கருணையைக் கொலைசெய்யக் கத்திதீட்டாதே
மாநுலக மெல்லாம் வாழ நன்றாகவே
மாசறுதொண்டுசெய்
தேச மொன்றாகவே (நாக)

மானிட வாழ்வொரு பரிணாம வட்டம்
மனச்சாட்சி சொன்னது மாறாத சட்டம்
ஊனுயிர் திவ்விய ஜீவன மோங்கவே
உள்ளும் புறமும்
ஒளி நிறைவாகவே (நாக)

## 40. காதலர் வாழியவே

(சுருட்டி) (தேசாதி)

பல்லவி

காதலர் வாழியவே—புதுயுகக்
காதலர் வாழியவே (காத)

அனுபல்லவி

ஆதிசதாசிவ சக்தி யருளினுல்
ஆனந்த மாகிட மானிட வாழ்வெல்லாம்
(காத)

சரணம்

வீணையுந் தந்தியும்போல்—வளர்கின்ற
வித்தையும் புத்தியும்போல்,
நாணுடன் வில்லேயும்போல்—கவி
நாதமும் சொல்லேயும்போல்
ஆண்மையும் பெண்மையும்
அழகுடன் மணமும்போல்
அறம்பொருள் இன்பமுடன்
அமரநிலை பெறவே (காத)

## 41. நியமம்

(தன்யாசி) (ஆதி)

*பல்லவி*

நியமமிது மனமே—தர்ம
நியாயமிது மனமே (நிய)

*அனுபல்லவி*

நயமுள்ள உண்மையே
நாவுக்கு மந்திரம்
நல்லசெயலே தந்திரம்...
பயமின்றிப் பகையின்றி
பாழும் பொருமையின்றி
பணிசெயல் சுதந்தரமாம்—மனமே (நிய)

*சரணம்*

உயிர்க்கருணை யொன்றே
உயர்தவ விரதம்
உள்ளறிவே சரதம்.
அயர்வறும் பொதுநலம்
அதுவே பூஜாபலம்
அன்பே ஜபதபம்
அமைதியே சிவமாம் (நிய)

## 42. மானிடக் கூண்டினுள்

(செஞ்சுருட்டி) (ஆதி)

மானிடக் கூண்டினுள் ஆனந்தம் பாடிடும்
வானப் பறவையினை—மனிதா
நானது வென்று தியானிப்ப தேமிக
நல்ல உபாசனையாம்

இன்னமு தக்கனி உன்னித யத்தில்
இனிக்குது பார் மனிதா—அதை
இன்னதென் றெண்ணிநீ தின்னக் கிடைத்திடின்
இன்பமிவ் வாழ்க்கையடா

பண்டிசை வேதத்தை வண்டொன்று நெஞ்சிலே
பாடிப் பரவசமாம்—அதைக்
கண்டு கலந்துநீ தொண்டுடன் கூடினால்
பரமசுகம் அதுவே...

தின்று நீ தூங்கித் தெருச்சண்டை போட்டுத்
தினமும் அழிவதென்னே ?—மனிதா
ஒன்றுடன் கூடிநீ ஒற்றுமையாக
உலகுக்கு நன்மை செய்வாய்...

சுருதியுடன் கூடிச் சொக்கும் இசையினைத்
தூண்டிடு ஜீவனிலே—மனிதா
கருதி யெழுந்த கடமையைச் செய்தவர்
காலத்தை வென்றிடுவார்—இந்த
ஞாலத்தை வென்றிடுவார்

## 43. வாழுவோமே!

(செஞ்சுருட்டி) (ஆதி)

*பல்லவி*

வாழுவோமே—அன்பு—சூழுவோமே—நீடு
வானக் குடைநிழலில்
ஆனந்தத் தோழராய் (வாழு)

*அனுபல்லவி*

யாழும் குழலுமென வாழுவோமே—பொங்கும்
ஆழித் திரையுடன்கூத் தாடுவோமே (வாழு)

*சரணங்கள்*

சாதிமத பேதமற நீதி யமைப்போம்—இந்தச்
சகமெல்லாம் ஒருகுல மாகச் செழிப்போம்
வீதிதொறும் சுதந்தர வேத மொலிப்போம்—நம்
வீடுதொறும் கலைவிளை யாட லுகப்போம்
(வாழு)

பெண்மை பெருமைபெற வாழுவோமே—அச்சப்
பேயைத் துரத்தி உல காளுவோமே...
உண்மை பெருமை பெற வாழுவோமே—இந்த
உலகில் கலகமில்லா ஒற்றுமை கொண்டே-நீடு
(வாழு)
கட்டுவிடு பட்ட தென்று பாடுவோமே—தெய்வக்
காதல் நலம் பெருக நாடுவோமே
தட்டுத் தடைகளெல்லாம்
எற்றி எறிந்தே—வெற்றித்
தாண்டவம் ஆடிநாம்
ஆண்டவன்அருளினுல் (வாழு)

## 44. தேவ ஜீவனம்

எந்த உயிரினிலும்
இருக்கும் இறைவனுடன்
சிந்தை கலந்தவர்க்கே—கிளியே
தேவஜீ வனமடி

கள்ள மனக்குரங்கைக்
கட்டி யடக்கிடினே
உள்ள வெளியினிலே—கிளியே
உண்மை பொலியுமடி

தாந்தம தென்கின்ற
தடித்த செருக்கறுத்தால்,
மாந்தருந் தேவர்களாய்—கிளியே
மாறிப் பிறப்பாரடீ !

பயமுந் துயருமின்றிப்
பதறுங் கவலையின்றி,
நயனுறு வீரருக்கே—கிளியே
ஞாலம் இனிக்குமடி

அன்பும் அறம் பொருளும்,
ஆத்ம சுதந்தரமும்
இன்ப வழியெனவே—கிளியே
எல்லார்க்கும் சொல்வோமடி

கரண சுத்தியுடனே
காதலில் ஒன்றுபட்டால்,
மரண பயமேனடீ—கிளியே
வாழ்க்கை அமுதமடீ!

மோக மயக்கமின்றி,
மூடப் பொறுமை யின்றி,
யோகத்திலே வளர்ந்தால்—கிளியே
உலகுவிண் ணுகுமடி

நமக்குப் பரமனுள்ளே
நல்கும் அருளறிவும்
இமைக்கும் இருவிழிக்கும்—கிளியே
இரவியைப் போலுமடி

ஈதலும் இன்புறலும்,
இதயம் உணருதலும்,
வேதமும் ஆகமும்—கிளியே
விளம்பிடும் உண்மையடி

## 45. தெய்வ வுணர்ச்சி

(ஹிந்துஸ்தான் தோடி) (ஆதி)

கண்ணை மூடிக் கழுத்தை நிமிர்த்திக்
  கால்மடக்கிச் செங் கைகளை நீட்டி,
எண்ணி யெண்ணியிங் கெண்ணறு நாட்கள்
  எண்க டந்த இறைவனைக் காணார்.
விண்ணைப் பார்ப்பர், விரதங்கள் காப்பார் ;
  விதியைச் சாதக வீட்டினிற் பார்ப்பார் ;
புண்ணி யத்தல யாத்திரை போவார் ;
  பொறுமை யற்றுப் புனிதனைக் காணார்.

நீறுங் கண்டியு நித்திய மான
  நேம நிட்டையு நீடுறக் காத்தும்,
மாறு கின்ற மனதை யடக்கார்
  மதச்சு ழலில் மயங்கி யலைவார்,
வீறு கொண்ட விருப்பத்தி னாலே,
  மெல்ல மெல்லப் புலனை யடக்கித்
தேறு ஞானத் தெளிவை யடைந்தார்
  தெய்வ மெங்கும் திகழுறக் காண்பார்.

கண்ணிலே உருக் காண்பது தெய்வம்,
காதிலே ஒலி கேட்பது தெய்வம்,
மண்ணு யிரென வாழ்வது தெய்வம்,
மாசிலாக் கவி வாக்கொரு தெய்வம்
திண்மை யுள்ளந் தியானத்தி லூன்றி,
தேசம் வாழத் திருப்பணி செய்தால்,
உண்மை யன்பருள் ஓங்கிட வாழ்ந்தால்,
உணர லாகும் உயர்பெருந் தெய்வம்.

## 46. சூரிய வட்டத்திலே

(காபி) (ஆதி)

சூரிய வட்டத்திலே—வளர்
தூண்டு சுடரொளியே—உன்
சீரிய நெஞ்சினிலே-வளர்
தியான விளக்கறிவாய்

காரின் கருமையிலே—நிறை
கருணைக் கண்ணனையே
பாருன் கருவிழியில்—இந்தப்
பாரும் அருள்மயமாம்

காலை மலரினிலே—மணங்
கலந்து நகைப்பவனே
மாலைக் கடலினிலே—விளையாடி
மகிழும் பிள்ளையடா...

அழப் பிறக்கவில்லை—துயரினில்
ஆழப் பிறக்கவில்லை.
தொழப்பிறக்கவில்லை—மனிதா
சுதந்தரத்திற் பிறந்தாய்...—உலகிற்குத்
தொண்டுசெய்யப் பிறந்தாய்—பூரணந்
துலங்க நீ பிறந்தாய்.

## 47. நிறச் செருக்கை விடடா

(*காம்போதி*) (*ரூபகம்*)

வெள்ளை கறுப்பென்றே—இனி
வேற்றுமை யாடுவதேன்...
உள்ளம் வெளுப்பானால்—மனிதா
உலகும் வெள்ளையடா...

குயில் கறுப்பானால்—அதன்
கொஞ்சும் இசை கறுப்போ ?
புயல் கறுப்பானால்—மழை
பொழிவதும் கறுப்போ ?

இரவு கறுத்தாலும்—விண்
இளமணி கறுப்போ ?
பரவுகடல் கறுத்தால்—முத்தும்
பவளமும் கறுப்போ ?

மேனி கறுப்பானல்—உயிர்
வேகங் கறுப்பாமோ ?
தேனீ கறுப்பானல்—மலர்த்
தேனுங் கறுப்பாமோ ?

பசு கறுப்பானல்—மனிதா
பாலுங் கறுப்பாமோ ?
சிசு கறுப்பானல்—மழலைச்
சிரிப்பு கறுப்பாமோ ?

## 48. அன்புமிக்க ஆசியா

(*காமாஸ்*) (*ரூபகம்*)

அன்பு மிக்க ஆசியா—
அமைதி நல்கும் ஆசியா
பொன்பரவும் காலை போலப்
புன்னகைக்கும் பூநிலம்.

கண்ணன், புத்தன், ஏசுவும்,
கணக்கில் ஞான தீரரும்
புண்ணியச் சுடர்களாய்ப்
பொலிந்த கோயில் ஆசியா.

பாரதாத்ம சக்தியும்
பழைய சீன ஞானமும்
ஜாரதுஷ்ட்ர வேதமும்
தழைத்த தெங்கள் ஆசியா.

மெள்ள மெள்ள வந்துசந்தை
விரித்தகங் கரித்திடும்
கொள்ளைப்படையை விரட்டியடிக்கக்
கொதித்தெழுந்த ஆசியா.

ஆறுதல் அளித்துலகை
அமைதியாக்கும் உண்மையாம்
வீறு மிக்க சந்த்ர காந்தி
வீசு கின்ற ஆசியா.

## 49. சுதந்தர இந்திய கீதம்

(பேஹாக்) (ஆதி)

*பல்லவி*

வீர சுதந்தர பாரதம் வாழ்கவே
வெற்றி முரசொலி விண் எட்டச் சூழ்கவே
ஜய ஜய (வீர)

*அநுபல்லவி*

பூரண ஞானமும், கர்மமும் தர்மமும்
பொலிந்து விளங்கிடவே புதுயுக ஜோதியாய்
—ஜய ஜய (வீர)

*சரணம்*

கட்டுகள் விட்டன கவலைகள் பட்டன ;
காந்தியின் சாந்தமும் கண்டது வெற்றியே...
எட்டெட்டுத் திக்கிலும் இசையொலி குலுங்கவே
ஏற்றுக ஜயக்கொடி கூற்றும் நடுநடுங்க—
ஜயஜய (வீர)

தொகையறா

இந்தியர் கிறிஸ்துவர் இஸ்லாமியருடன்
எல்லாரும் ஓர்குலம் ஓர்நிக ராகவே,
வந்தே மாதரம் ஜேஹிந்தெனவே...
வாழ்த்திநம் அன்னையை அரியணை
யேற்றுவோம்—ஜயஜய (வீர)

அல்லல் ஒழிந்திடும் வல்லர சென்னவே
அகிலமெல லாம் வணங்கும் அத்யாத்ம
சக்தியாய்,
எல்லையில் வானமும் இரவியும் கடலும்போல்,
எந்நாளும் பொன்னுளாய் இறைவன்
திருவருளால்—ஜயஜய (வீர)

## 50. சுதந்தர இந்தியா

பல்லாண்டு வாழ்க

(காபி) (ஆதி)

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க—எங்கள்
பாரத தேசம் பரிதியைப் போலே (பல்

வல்லர சென்ன வளர்ந்தே—இந்த
வையத்திலே அறம் வாழ உயர்ந்தே...
நல்லன யாவையும் சுரந்தே—இன்ப
நாயகியாய், அன்புத் தாயக மாக (பல்)

எட்டெட்டுத் திக்கிலும் வீசும்—இவள்
இதயக் கனலின் புதிய சுடரைக்
கட்டுப் படுத்துவார் யாரே—அதைக்
கண்டுணர் தீரர் கடவுளா வாரே (பல்)

அன்னிய மாயங்கள் வருமோ—இனி
அரக்கரின் சூழ்ச்சிகள் அச்சந் தருமோ?
தன்னிக ரற்றதோர் சக்தி—தன்னைத்
தந்தெமைக் காப்பவள் இந்தியத் தாயே(பல்)

நாசப் பகைக்குலம் வீழ—எல்லா
நாட்டினரும் ஒரு கூட்டுறவாக,
ஆசிய ஜோதி விளங்க—என்றும்
அமரத் தன்மைதரும் அன்னை எம் அன்னை(பல்)

அருளினுல் உரிமையைப் பெற்ருள்—தன்
ஆத்மசக்தி உல காண்டிடக் கற்ருள்...
இருளினை ஓட்டிடும் இரவி—எங்கள்
இந்தியத் தாய் வேத மந்திர அருவி (பல்)

## 51. தேசக்கொடி வணக்கம்

*இராகமாலிகை காபி, மோகனம், செஞ்சுருட்டி : பிலகரி, ஸ்ரீ ராகங்கள்—ரூபக தாளம்*

ஒற்றுமையாய்ப் பணிவோம்—தாயின்
ஓங்கும் ஐயக்கொடியை
வெற்றிகள் கூறிடுவோம்—சுற்றி
வீர நடம் புரிவோம். (ஒற்)

செம்பசும் வெண்ணிறத்தில்—நீலத்
திருவளர் சக்கரமே
அன்பின் அறிகுறியாம்—இந்த
ஆத்ம சக்திக் கொடியே... (ஒற்)

போர்ப்புயல் வரினும்—பூகம்பப்,
புரட்சிகள் வரினும்
கார்ப்புயல் வரினும்—நிலை
கலங்கி நிற்பதுண்டோ ? (ஒற்)

அன்னிய மாயத்திற்கும்—இனி
அடிமை யாவதுண்டோ ?
தன்னிக ரற்ற பலம்—பெற்ற
சத்திய வீரர் குலம் !— (ஒற்)

சூரிய சந்திரர்க்கும்—நமதிசை
சொல்லிப் பறக்குது பார் ! !
பாரி லிதன் பெருமை—எங்கும்
பரவத் தொண்டு செய்வோம் ! (ஒற்)

இந்த உடலினிலே—ஒருதுளி
இரத்தம் உள்ளமட்டும்,
எந்தாய் வாழ்கவென்றே—இதை
ஏந்திப் பிடித்திடுவோம்... (ஒற்)

வங்கக் கலைவாணர்—தமிழகம்
வாழும் அருளாளர்
சிங்க மராடியர்கள்—சிந்தியர்
சீக்கியர் பாரசிகர், (ஒற்)

செல்வக் குசராத்தர்—கோசலர்,
தெலுங்கர் கன்னடியர்,
நல்ல மலையாளர்—துளுவர்
நம்மவர் யாவருமே— (ஒற்)

எந்த மதத்தினரும்—உலகில்
எந்த வகுப்பினரும்
இந்திய ஜோதியிலே—எல்லாரும்
இணைந்து வாழ்ந்திடுவோம்... (ஒற்)

நாட்டையோர் நாடழிக்கும்—அதர்மத்தை
நாங்கள் இனிப் பொறுக்கோம்
வீட்டை யழிக்கவரும்—கொடியரை
வீமன் எனப் புடைப்போம். (ஒற்)

நல்லதை ஆதரிப்போம்—தீமை
நலியப் போர்புரிவோம்
எல்லாரும் இன்புறவே—மணிக்கொடி
ஏற்றிப் பணிந்திடுவோம். (ஒற்)

கொடி பறக்குதம்மா—புதுயுகக்
கொடி பறக்குதம்மா!
துடிதுடிக்குதம்மா—ஆவேசம்
துள்ளிப் பெருகுதம்மா! (ஒற்)

## 52. ஜே ஹிந்த்

(மாண்டு) (திஸ்ரஏகம்)

சிங்க நாத கர்ஜனையுடன்—ஜே ஜே
ஜேஹிந்தென்ன தீரர் முன்செல்வோம்.
சங்க நாத பேரி கொட்டியே—ஹே ஹே
சத்தியச் சமரை வெல்லுவோம்... (சிங்க)

கோடிக்கோடி வீரர் நாடிதே—தர்மக்
கொடிபறக்கும் கொற்ற நாடிதே.
ஈடி லாத இனிய நாடிதே—ஆம், ஆம்
ஈகை மிக்க தியாக நாடிதே—ஜே ஜே (சிங்க)

அன்னியர்நம் அன்னை நாட்டினை—ஹே ஹே
அடிமை யாக்க முடியுமோ இனி
தன்னுறுதி கொண்ட சூரர்நாம்—சு
தர்மம் என்றும் வாழ வாழுவோம்—ஜேஜே!
(சிங்க

பெற்ற தாயைப் பெருமை செய்குவோம்—இனிப்
பேடிபோலத் தொடை நடுங்கிலோம்
ஒற்றுமையின் சக்தி யோங்கவே—நாம்
ஒவ்வொருவரும் உலக மாகுவோம்—ஜே ஜே
(சிங்க)

## 53. முன்னேற்றம்

முரசு கொட்டி முந்து செல்லுவோம்—
மூவுல கனைத்தும் வெல்லுவோம் !

அரசு நாட்டி ஆட்சி செய்குவோம்—
ஆண்மை கொண்டு மேன்மை எய்துவோம்.

நெருப்பு கக்கும் நிருதர் தேக்கினும்
நீரின் வெள்ளம் போல முன்செல்வோம்.

விருப்பு மிக்க வெற்றி காட்டுவோம்
விண்ணை எட்ட விருது நாட்டுவோம்.

தோகையர் பல்லாண் டிசைக்கவே
துந்துமி ஜயம் முழங்கவே,

வாகை மீது வாகை சூடியே
மலை யெனத் தலை நிமிருவோம்...

பார்க்கும் சிங்கப் பார்வை ஒன்றிலே
பதை பதைத்துப் பகைவர் ஓடவே...

ஆக்க மிக்க ஆன்ம நேயர்கள்
அருள் செழித்த பொருளை நாடுவோம் !

## 54. அமரகானம்

(கல்யாணி) (ரூபகம்)

பல்லவி

நர சமூகம் அமர ராக
நன்று வாழ்க ! வாழ்கவே !

அநுபல்லவி

பிரிவு செய்யும் பேய்க ளின்றி
உரிமை கொண்ட உள்ளம் ஒன்றி (நர)

சரணம்

கொடுமை செய்யும் கோலே முறித்துக்
கொள்ளேக் கூட்டங் குமையத் துரத்தி,
அடிமை வறுமை மடமை அருகி,
அறிவுந் தொழிலும் அன்பும் பெருகி (நர)

மண்ணுமுண்டு மழையுமுண்டு
வரம்பிலாத சக்தியுண்டு,
உண்ணப் பஞ்சம் உலகில் இல்லை ;
உழைப்பும் பிழைப்பும் செழிக்க நாளும் (நர)

பரமன் சக்தி பரவி யாளும்
பாரும் ஒன்றே யாரும் ஒன்றே.
தருமம் போற்றிக் கரும வீரர்
சமரஸ சன்மார்க்க ராக (நர)

வேகப் புலனை அடக்கி வென்று,
வீறு பெற்ற தீர ராக,
சோக மோகச் சோர்வி லாது
போக யோகப் பூரணராய் (நர)

சாவு மின்றி, நோவு மின்றிச்
சத்தி யத்தில் ஒத்து நின்று,
தேவ ராக மானி டர்கள்
தெளிந்த ஞானத் தேனையுண்டு (நர)

## 55. சேர்ந்து வாழும்

சேர்ந்து வாழுந் திறமறி வோமே
 தீரராகத் தலைநிமிர் வோமே

சோர்ந்தி டாது துணிந்து நிற்போமே
 சொல்லும் செய்கையும் ஒன்றுசெய் வோமே

கூர்ந்த நன்மதி கொண்டுயர் வோமே
 கொண்ட கொள்கைக் குயிர்கொடுப் போமே.

நேர்ந்த போதறத் தொண்டுசெய் வோமே
 நேரத்தைப் பொன்னென் றேநினைப் போமே

தன்ன லத்தைத் தவிர்த்திடு வோமே
 தாய்ந லஞ்செய் தவம்புரி வோமே

அன்னி யர்வலையை அறுப் போமே
 ஆண்மை தன்னை மிகவளர்ப் போமே

மன்னன் என்மனச் சாட்சியென் போமே
 மாநி லம்பொது வாய்மதிப் போமே.

இன்னமும் இருளில் மடி யாமல்
 இரவி யைப்போல் எழுந்துநிற் போமே!

## 56. பூரணன்

பூரணன் அருளைப் போற்றிப்
புதிய வாழ்வு வாழுவோம்
காரணிந்த வானெனக்
கருணை யன்பு மேவியே (பூர)

வற்றிலா வளமையும்
வரம்பி லாத ஈகையும்,
பற்றிலாத தொண்டுடன்
பதும வண்டு போலவே (பூர)

கள்ள மற்ற உள்ளமும்,
கலக்க மற்ற சிந்தையும்,
கொள்ளை யற்ற செல்வமும்
குலாவக் குன்றின் வெள்ளம்போல் (பூர)

இரும்பு போல மேனியும்,
இரக்க முள்ள நெஞ்சமும்,
சுரும்பு போல் முயற்சியும்
சுரண்ட லற்ற நேர்மையும்,

பொறுமை மிக்க வீரமும்
பொருமை யற்ற நேயமும்,
வறுமை யற்ற நாட்டிலே
வளர யாழின் வண்மைபோல் (பூர)

## 57. கூட்டுறவு

(புன்னுகவராளி) (ஆதி)

கூட்டுறவு கொண்டு செழிப்போம்—இந்தக்
குவலயமெல்லாம் அன்புக் கோயிலமைப்போம்.
பாட்டுடனே பல ஸ்வரம்போல்—இந்தப்
பாரெல்லாம் நாட்டுடனே நாடு கலந்தே (கூட்)

ஒவ்வொருவர் புலமையையுந்—தூண்டி
உலகப் பொதுநலத்தை ஓங்கிடச் செய்வோம்.
செவ்வியதோர் நீதி யமைப்போம் —தொழில்
செய்பவர்க்கே உணவெனத் திட்டமிடுவோம் (கூட்)

பூமியொரு நகரம் என்போம்—அதன்
பொலிவுள்ள வீதிகளே நாடுகள் என்போம்.
நாமரூப பேதமேயின்றி—நல்ல
நாகரிகப் பண்புடனே ஈகை வளர்ப்போம். (கூட்)

கீதையுடன் வள்ளுவரின் வேதம்படிப்போம்—ஏசு
    கிறிஸ்து முஹம்மதருள் வாக்கை யுகப்போம்.
ஓதரிய கம்பனுடனே—வான்மீகி
    ஓமருடன் ஷேக்ஸ்பியரும் ஓதி மகிழ்வோம்.
(கூட்)

ஆங்கிலங்கற்போம்—நல்—ஆரியம் கற்போம்
    அமுதத் தமிழுடனே இந்தியுங் கற்போம்
ஓங்கும் பிரெஞ்சு சீனம் ரஷ்ஷியன் முதல்
    ஒற்றுமைக்கு வேண்டுமொழி கற்று
மொழிவோம் (கூட்)

நமதே பெரியதெனச் சம்பமடியோம்—பல
    நாட்டினரின் புலமையை நன்று பயில்வோம்
சமரஸ உள்ளமுடன் விமரிசையாய்—மிகத்
    தாராள நேயமுடன் பாராளுவோம்... (கூட்)

உள்ளறிவை இந்தியர் தந்தே—மேற்கின்
    ஒப்பற்ற மூளை செய்யும் அற்புதங் கற்போம்
வெள்ளை யரின் யந்திரக்கலை—கால
    வேகத்தை வென்றிட வேண்டுமிகவே (கூட்)

இரும்பு நிலக்கரிமின் சாரமுடனே
  எண்ணற்ற தொழில்களைப் பண்ணியுழைப்போம்.
விரும்பு மிடங்களுக்குக் கப்பல் நடத்தி,
  விரைவாகக் கொண்டுகொடுத் துண்டு
    மகிழ்வோம் (கூட்)

கல்வி வளர்ப்போம்—தொழிற்—செல்வம்
    வளர்ப்போம்
  கலைவளர்ப்போம்—செல்வ—மலைவளர்ப்போம்
வில்லும் விளறிக்கம்பும் என்னபயனே—புது
  விஞ்ஞானம் அற்றவன் அஞ்ஞானியே (கூட்)

ஆகாச மண்டலத்தில் விடுசமைக்க—ஓர்
  அணுசக்திப் பறவையில் அமர்ந்து செல்வோம்.
சாகாத சக்திபெற மேதினியிலே—யோக
  சஞ்சீவி மருந்தினைக் கண்டுபிடிப்போம் (கூட்)

(வேறு) (ஜம்பை)

வஞ்சகப் போட்டிக ளின்றி—புவி
  மக்களெல்லாம் மன மொன்றி
  அஞ்சவரும் பகையின்றி—என்றும்
  அமைதியிலே கருத்தூன்றி,

அவரவர் மேதையைக் கொண்டே—இந்த
அகில உலகும் அருளின் இணைந்தே
எவரெவர் உரிமையும் காத்தே—இங்கே
இரவிக் கதிர்கள்போல் விரவி—நல்ல
கூட்டுறவுகொண்டு செழிப்போம் !

## 58. துணிவுள்ள வீரர்கள்

(வராளி) (ஜம்பை)

துணிவுள்ள வீரர்கள் அணிசேர வருக
துன்பத்தைத்தூவென்னும் துணைவர்கள் வருக!
பணிவுள்ள தொண்டர்கள் படைசேர வருக !
பரிசுத்த மனமுள்ள பக்தர்கள் வருக.

பேருக்கும் புகழுக்கும் பேராசை யின்றிப்
பிறருக்கு வாழ்ந்திடும் பெரியார்கள் வருக !
ஊருக்கு உழைத்திடும் உத்தமர் வருக
உபகார சீலர்கள் உடனோடி வருக.

அருளினைத் தேடிடும் அறவோர்கள் வருக.
அன்புடன் கூடிடும் பண்பர்கள் வருக.
பொருளினைப் பொதுவாக்கும் புண்ணியர் வருக
பொழுதினைப் பொன்னுக்கும் புலவர்கள் வருக.

பீடுறத் தொழிலாற்றும் பெருமையோர் வருக
பிச்சையே கேளாத பெருந்தொண்டர் வருக.
நாடுமுன் னேறவே வீடுமுன்னேற
ஞால முன்னேறவே நாடுவோர் வருக.

அஞ்சாத தீரர்கள் அரிபோல வருக.
அடிமைத் தளைகளைப் பொடி செய்ய வருக
துஞ்சாத பரஞான சூரியர் வருக
சுத்தான்ம நேயர்கள் சுடரோங்க வருக.

## 59. கடமை யென்று

(மாண்டு) (திஸ்ரஏகம்)

கடமை யென்று தேசசேவை செய்யடா
கண்ணன் சொன்ன கர்ம யோக மெய்தடா
மடமையான அடிமை நோய்கள் மடிகவே
மனித வாழ்வில் அமைதியின்பம் படிகவே

மேடை மாலை சூடிடாத போதிலும்—அச்சு
 விளம்பரங்கள் மெச்சிடாத போதிலும்,
நாடதிரப் போற்றிடாத போதிலும்—நீ
 நல்லதை அடக்கமாய் நடத்தடா

பட்சபாத மானபத்தி ரிக்கைகள்—உன்
 பணிகளை மறைத்து விட்ட போதிலும்...
துச்ச மான போட்டி வந்த போதிலும்,
 தூற்றிடும் பொறாமை சூழ்ந்த போதிலும்,

காலமுன்னைப் பரிகசித்த போதிலும்,
 கடவுளுண்டு தருமமுண்டு காணுவாய்.
ஞாலமுன்னை யறியு நாளும் வருமடா—நம்பு
 நல்ல செய்கை நல்ல பயனைத் தருமடா.

## 60. ஆண்மைக் கும்மி

வாருங்கள் ஆண்பிள்ளைச் சிங்கங்களா—நிலம்
 வாழ வறுமையை ஓட்டிடுவோம்....
பாருங்கள் பற்பல நாடுகளை—நாமும்
 பாய்ந்துமுன் னேறப் பணிபுரிவோம்.

நாட்டுக்கு நல்ல வளமை யுண்டாம்—உங்கள்
நாடிக்கு நல்ல திறமையுண்டாம்...
வீட்டுக்கு நல்ல விளைவு முண்டாம்—வாரீர்
வேலைக்குத் தக்கதோர் கூலியுண்டாம்.

மேடை மினுக்குகள் செய்துவிட்டீர்—அச்சு
விளம்ப ரங்களும் எய்திவிட்டீர்...
ஆடை யுணவிற்குந் திண்டாட்டம்—எனில்
ஆண்பிள்ளை காள்என்ன கொண்டாட்டம் ?

அன்னியர் யந்திரம் வாங்குகின்றீர்—அதை
ஆக்குவோம் என்றுற்பின் வாங்குகின்றீர் !
பொன்மலை யைக்கடல் கொட்டுகின்றீர்—வீட்டிற்
போதுபோ காதுகை கட்டுகின்றீர் !

கட்சிச் சண்டைபல போடுகின்றீர்—பின்னே
காக்காய்க் கூட்டம்போலே ஓடுகின்றீர்,
உட்சினம் வைத்துற வாடுகின்றீர்—ஐயோ
ஒற்றுமை யின்றித்தள் ளாடுகின்றீர் !

காலத்தை வீணாய்க் கொலைபுரிவீர்—பழங்
கதைகள் பேசிக்கொண் டே திரிவீர் !
வேலைக்கு நாக்கை வழிக்கின்றீர்—சொன்னால்
விதியை நொந்து பழிக்கின்றீர் !

வித்துண்டு நாட்ட நிலமுண்டு, நீருண்டு
வேட்டிநெய் யத்தறி ஓட்டமுண்டு,
சத்துள்ள மூலப் பொருளுமுண்டு—புதுச்
சாத்திரங் கற்கத் திறமை யுண்டு...

இரும்பு நிலக்கரி எண்ணெய்ச் சுரங்கம்...
இயந்திர சாதன மெங்குமுண்டாம்
கரும்பு வெட்டிக் கடித்துண்ண மாட்டாது
கையைப் பிசைந்து கலங்குகின்றீர்.

பாடு பட்டோருக்குத் தேடிவரும் பலன்
பாடப்பாட ராகங் கூடிவரும்
ஏடு துளைத்தது போதுமினி—நாட்டீர் !
எழுந்து வாருந் தொழில்புரிய !

கப்பல் விடுவோம்...கனிகளைத் தோண்டுவோம்
காற்றில்மின் சாரக் கனல் பிடிப்போம்...
ஒப்பரும் வானொலி அற்புதங்கள் செய்வோம்
ஒன்றி முயலுங்கள் வன்றமிழீர் !

ஓங்கி யுலகம் செழிப்புறவே—மாந்தர்
ஓடும் அருவிபோல் வாழ்ந்திடுவோம்...
தூங்கா தியற்கையைச் சோதித்துக் கோதற்ற
தொழில்செய் யோகத்தில் ஆழ்ந்திடுவோம்

## 61. இந்தியா எம் உடல்

(பேஹாக்) (ஆதி)

இந்திய நாடெங்கள் உடலே—வெள்ளி
இமயமலை எங்கள் முடியே
விந்திய மலை எங்கள் இடையே—கீழ்
மேல்தொடர் எந் திருக் கரங்கள் (இ)

கங்கையும் சிந்துவும் சடைகள்—தென்
கன்னிமுனை எங்கள் அடிகள்.
பொங்கிடும் காவிரி விமலை—எங்கள்
பொன்னொளிர் பூமணி யாரம் (இ)

அந்தண உள்ளமும் அறிவும்—வீரர்
ஆண்மையும் ஆயிரந் தொழிலும்,
சிந்தை மகிழ்ந்திடுந் தொண்டும்—எங்கள்
ஜீவன விரதமாய்க் கொண்டோம் (இ)

ஒவ்வொரு மனிதனும் நாமே—நாம்
ஒவ்வொரு மனிதனும் ஆவோம்
இவ்வுல காலய மாமே—அதில்
இன்னுயிர்க் கூட்டமே இறைவன். (இ)

உண்பதும் இந்திய உணவே—நாம்
உடுப்பதும் இந்திய உடையே
எண்ணுவ திந்திய நலமே—இந்த
இணைப்பினில் உள்ளது பலமே. (இ)

## 62. ஆண்மை கொண்டு

(மந்தாரி) (திஸ்ரஏகம்)

ஆண்மை கொண்டு தலைநிமிர்
அதி மனித வீரனே ;
கேண்மை கொண்ட நெஞ்சிலே
கிளர்ந்த தெய்வத் தீயுடன் (ஆண்)

ஏறுபோலத் தலைநிமிர்
இணையி லாத சிங்கமே
வீறு! கொண்டு நடநட
விடுதலைக்கு விடுதலை. (ஆண்)

திரிகி விட்டு மீசையைத்
திண்புயம் குலுங்கவே
பரிதி போன்ற பார்வையாய்,
பவளக் காலைப் பயிரைப்போல் (ஆண்)

உறுதி யான கைகளும்
　　ஊக்கமான கால்களும்
இறுதி செய்ய வறுமையை
　　எழுந்த வானம் போலவே (ஆண்)

மதிமிகுந்த கல்வியும்
　　மாசிலா ஒழுக்கமும்
விதியை வெல்லும் வீரமும்
　　விளங்கு சக்திக் குன்றுபோல் (ஆண்)

நடுநடுங்கப் பாதகர்
　　நயந்து போற்ற நல்லவர்
சுடு சுடர்க் கொழுந்தெனச்
　　சுதந்தரச் செருக்குடன் (ஆண்)

அடிமைக் கட்டு முறிபட
　　அக்ரமங்கள் பறிபட
மடமைத் துன்பம் மெலிவுற
　　மங்க லங்கள் பொலிவுற (ஆண்)

கரும ஞான வீரனே
　　கலங்கிடாத தீரனே
தரும ராஜ்யம் இலகிட
　　சமவுரிமை நிலவிட (ஆண்

(காமாஸ்) (ரூபகம்)

## 63. கண்குளிர வருகிறுள்

கண் குளிர வருகிறுள் ;
கலைகுலுங்குங் கற்பகம் !
பெண்ணமுத சக்தியைப்
பெருமை செய்ய வாருங்கள் !

உரிமை பெற்ற நாட்டிலே,
உண்மையின்ப மோங்கவே
பெரிய பெரிய கனவுடன்
பிரியமாக வருகிறுள்

அருணப்பொன் னகையினுள்
அழகு சொட்டும் அன்பினுள்.
வருணப் பூ வனமென
வனப்புடன் வருகிறுள்

கோடி யின்பக் கூட்டமோர்
குரலெடுத்து யாழுடன்
பாடியாடும் பான்மைபோல்
பரவசமாய் வருகிறுள்

சமதையான ஒற்றுமையும்
 சண்டையற்ற வாழ்க்கையும்
அமைதியாக நாட்டவே
 அமர சக்தி வருகிருள்

கண்ணுங் கண்ணும் போலவே
 காதுங் காதும்போலவே
பெண்ணும் ஆணும் நிகரெனப்
 பேசிக் கைகள் வீசியே

எங்க ளிந்தியாவிலே
 எழுந்தனள் இளந்திரு ;
மங்கலப்பண் பாடியே
 மதுமலர் சொரிகுவோம்

## 64. புதுயுகப் பெண்

(*கானடா*) (ஆதி)

பெண்ணைப் பெருமை செய்வோம்—புவி
 பெருமைபெற் றோங்குகிடவே.
மண்ணிலத்தை வளர்க்கும்—சுப
 மங்கள சக்தி யடா (பெ)

நிமிர்ந்த நடை யுடையாள்—இவள்
நேரிய பார்வை கொண்டாள்
அமிர்த மொழியுடையாள்—இவள்
அழகொரு காவியமாம் (பெ)

கசந்த பிறவியினை—மனக்
கவலையினைத் துடைக்க,
வசந்த மலர்வனம்போல்—இன்பம்
வளர்நகை குலுங்குகின்றாள் (பெ)

காதலால் உலகைவளர்—ஆனந்தக்
கலைதரு மலை யருவி.
சீத முகத்தினிலே—ஒரு
தெய்விகச் சொக்குடையாள் (பெ)

பட்ட மரந் தழைக்கும்—இவள்
பங்கயப் பார்வையினால்,
வட்டத் திருமார்பில்—உயிர்
மண்டலம் வளருதடா (பெ)

சாய மினுக்குமில்லை—தங்கத்
தளுக்கு நகையு மில்லை;
தூய பொன் மேனியிலே—காந்தச்
சுரங்கமொன் றுள்ளதடா (பெ)

அச்சம் நாணம் மடமை—என்றே
    அடுக்கும் பழங் கதையேன் ?
உச்ச மலை விளக்கைப்—போல
    ஓங்கிய கற்பரசி (பெ)

வீட்டுக் கரசி யிவள்—கலை
    விருந்திற் கரசியிவள்;
நாட்டுக் கரசி யிவள்—வாழி
    நவயுக நாயகியே (பெ)

## 65. பெண்ணுரிமைக் கும்மி

விண்ணமு தம்பொழி வெள்ளி நிலாவில்,
    விடுதலைக் கும்மி யடித்திடுவோம்.
பெண்ணமு தங்களின் பிறப்பு ரிமையைப்
    பேசிக் கும்மி யடித்திடுவோம்—! கால்கள்
    வீசிக் கும்மி யடித்திடுவோம் !

பாலிற் கலந்த பசுந்தமிழ்த் தேனெனப்
    பண்கள் இசைத்து நடித்திடுவோம் !
காலிற் சிலம்பு கலீர் கலீரெனக்
    கைகள் அடித்துக் குதித்திடுவோம் !

காதலுண் டானதும் பெண்ணாலே—வாழ்வின்
 கதை வளர்ந்ததும் பெண்ணாலே ;
ஆதர வான மனையறம் பூத்துநல்
 அன்பு கனிவதும் பெண்ணாலே !

தீரர் விளைவதும் பெண்ணாலே—கலைச்
 செல்வஞ் செழிப்பதும் பெண்ணாலே ;
பாரில் அழகும் சுவையும் அமுதும்
 பரந்து தழைப்பதும் பெண்ணாலே !

வீட்டிற் கரசியும் பெண்ணன்றோ—வீரர்
 விளைந்த கற்பகம் பெண்ணன்றோ ?
நாட்டிற் சமப்பங்கு பெண்ணன்றோ—பொது
 நல வலக்கரம் பெண்ணன்றோ ?

ஆண்பிள்ளை யென்றுற் களிப்பதுவும்—பெண்ணை
 'ஐயோடி' என்று சலிப்பதுவும்,
வீண்மனப்பிழை என்று விளம்பிநாம்
 வீர சுதந்தரம் கூறிடுவோம் !

செல்வம் இருவர்க்கும் பங்கென்போம்—குல
 க்ஷேமம் இருவர்க்கும் பங்கென்போம்
கல்வி இருவர்க்கும் கண்ணென்போம்—தூய
 கற்பும் இருவரின் காப்பென்போம் !

பொருத்த மில்லாத பொம்மைமணம்—வீட்டைப்
பொட்ட லடிக்கும் வரகூல்கம்
அருத்த மற்ற சடங்குகள் யாவையும்
அள்ளிப் பழங்குழி தள்ளிடுவோம் !

மூலையைக் காத்திடும் பேச்சுமில்லை—இனி
முக்காடு போட்டிடும் கூச்ச லில்லை
மாலையும் மஞ்சளும் குங்குமமும்—புது
மலர்நகையுமாய் வாழ்ந்திடுவோம் !

அல்லியைப் போல் அர சாண்டிடுவோம்—அருள்
ஔவையைப் போற்கவி பாடிடுவோம்,
வள்ளியைப் போல மனங்கொண்ட காதல்
மணாளரை யின்புறக் கூடிடுவோம் !

பேறுப் பிடிப்பதி லுஞ்சலியோம்—சட்டம்
பேசிச் செயிப்பதிலுஞ் சலியோம் !
சேனதி பத்யத்தி லுஞ்சலியோம்—பெண்கள்
தேசத்தை யாளக்கை வீசி வந்தோம்

## 66. கோபுரம் போல

(கரகரப்பிரியா) (ஆதி)

கோபுரம் போல நிமிர்வாய்—பலங்
கொண்ட நவயுக வீரா
சாபப் பழந்துய ரெல்லாம்—நீ
சாடி யழித்திடு தீரா (கோ)

தூண்டிய செஞ்சுடர் போலே—உன்
தோற்றம் விளங்கிட வேண்டும்.
நீண்ட புகழ் பெற வேண்டும்—நின்
நினைவு செயல்பெற வேண்டும் (கோ)

கண்டதும் கைகுவித்துலகம்—உன்
கருணையைப் போற்றிட வேண்டும்
குண்டர் நடுங்கிடவேண்டும்—உன்முன்
கூற்றும் ஒடுங்கிடவேண்டும் (கோ)

தொத்தடிமைச்சிறை போக்கி—நல்ல
சுதந்தர வாழ்வினை ஊக்கி,
சத்திய நன்னெறி யாக்கி—ஜீவ
சாதனம் கனிதர வேண்டும் (கோ)

வேலியும் காவலும் கண்ணும்—தோட்ட
வேலைக்கு வேண்டுவ துறுதி,
ஞாலத்தில் அறத்தினை நாட்ட—மிக
நல்ல படைத்திரள் வேண்டும் (கோ)

## 67. பேய்கள்

எத்தனை பேய்க்குலங்கள்—எமன்
ஏவிய நாய்க்குலங்கள்...
அத்த னையும் ஒழிப்போம்—பின்னை
அமைதியுடன் செழிப்போம் (எத்)

முன்னை முகமலர்ந்தே—மன
மோகத்தை மூட்டிவிட்டே
பின்னை முடிச்சவிழ்க்கும்—வஞ்சப்
பேய், சுரண்டும் பெரும்பேய்

மதங்கொண்ட மர்க்கடப்பேய்—காம
மதுவுண்டு சதிரிடும்பேய்,
அதஞ்செய்யும் ஆணவப்பேய்—ஆளை
அடுத்துக் கெடுத்திடும்பேய் (எத்)

சிண்டு முடித்துவிட்டே—ஊரைச்
செருக்கள மாக்குகின்ற
குண்டுணிக் குள்ளநரிப்பேய்—கடுங்
கோபப் பெரும்புலிப்பேய் (எத்)

ஆத்திரச் சத்தமிடும்—புய
லாகிய சுயநலப்பேய்.
நாத்திகத் திமிர் நடப்பேய்—போலி
நாகரிகப் புதுப்பேய் (எத்)

போட்டி பொறாமைகளால்—பச்சைப்
பொய்சொல்லி வஞ்சனையால்,
வாட்டமில் லாது நிதம்—தொந்தி
வளர்த்திடும் வாயடிப்பேய் (எத்)

## 68. கலையழகு

(காபி) (ரூபகம்)

கண் செவிக் கினிதே
கருத்தினுக் கினிதே
நுண் கலை யின்பம்
நுகருக மனமே ! (க)

கவிகளின் கனவும்
    கடவுளின் பொலிவும்
புவிகளின் சிற்பப்
    புலமையிற் பொங்கும் (க)

உன்னத மலையின்
    ஓமிசை யருவி
இன்னிசை யாழில்
    ஏழிசை மீட்டும் (க)

இளந்திரு வசந்தம்
    இனமலர் சூடும்
உளங் குளிர் அழகே
    ஓவியக் காட்சி (க)

மதிநில வணைந்தே
    மகிழ்ந்தெழுங் கடல் போல்
சதிமிதித் தாடும்
    தாண்டவக் கலையே (க)

# 69. கொலை மறுப்பு

(செஞ்சுருட்டி) (ஆதி)

கொலையும் புலையும் வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாபமும் வேண்டாம் ,,
உலகெல்லாம் கோயிலன்றோ ,,
உயிரெல்லாம் சாமியன்றோ ,,
கல்லுக்குக் கண்பிதுக்கி ,,
காளி கறுப்பனென்பீர் ,,
கல்லை உடைத்துப் பார்த்தால் ,,
காளி கறுப்பனில்லை ,,
பூசை பலிகளெல்லாம் ,,
பூசாரி காசடியே ,,
மோசம் போகாதிருப்பீர் ,,
மூடப் பழக்க மிவை ,,
கூற்றுக்குப் பயப்படும் ,,
கொலைக்குப் பயப்படுவீர் ,,
நாற்றவுடலை யுண்ணல் ,,
நல்ல பகுத்தறிவோ ? ,,

ஆட்டை யறுத்தபாவம் அண்ணமாரே
    ஆளை அறுக்குதையா ,,
மாட்டை வதைத்த பாவம் ,,
    மனிதரை வாட்டுதையா ,,
புன்புலா லுண்ணுவதே ,,
    போராய் வளருதையா ,,
அன்பு மனிதர் குணம் ,,
    அஹிம்ஸையே நாகரிகம் ,,

## 70. தேசத்தை

(செஞ்சுருட்டி) (திஸ்ரஏகம்)

தேசத்தைத் தெய்வமென்போம்—தேச
    சேவையைப் பூசையென்போம்
நேசத்தை வாழ்க்கையென்போம்—பொது
    நீதி சன் மார்க்கமென்போம்

தொண்டினில் ஒன்றுபட்டால்—மனத்
    தொல்லை யில்லா திருப்போம்—தேன்
வண்டமை கூட்டினிலே—மலர்
    வகையின் பேச்சுமுண்டோ ?

கொற்றவனும் மனிதன்—தெருக்
கூட்டியுமே மனிதன்
கற்றவனும் மனிதன்—மலைக்
காடவனும் மனிதன்

எந்த வகுப்புமின்றி—அவரவர்
இதயந் தொட்டுணர்ந்தால்
இந்த வுலகினிலே—இனி
இன்னல் விளைவதுண்டோ ?

## 71. நல்ல தேசபக்தன்

(கரகரப்பிரியா) (திஸ்ரஏகம்)

நாடு வாழ நன்மை செய்யும்
நல்ல தேச பக்தன்,
மேடை மாலை சூட வேண்டி,
வேடம் போட மாட்டான் !

சுயநலத்தைக் கட்டி வைத்துப்
பொது நலத்தைத் தூண்டி,
அயலடிமை மயக்க மின்றி
அன்புத் தொண்டு செய்வான்.

காலமறிந்து, கலையறிந்து,
கருமயோகமாக
ஞாலமறிந்து, சீலமறிந்து,
நாடறிந்து நடப்பான்.

தெள்ளத் தெளிந்த
சிந்தனையும்
செயலுஞ் சொல்லுமுடையான்;
அள்ள அள்ள ஊறுகின்ற
அமுத வூற்றைப் போன்றான்

வட்டமிட்டுக் கட்சி கட்டி
வம்பளக்க மாட்டான்.
பட்டம் பதவி மோகங் கொண்டு
பண்பை விற்க மாட்டான்

அச்சமற்ற தேச பக்தன்
ஆறுபோல வாழ்வான்;
உச்சமான தியாகத்தாலே
உண்மை வீரனாவான்-

## 72. ஏழை படும் பாடு

(முகாரி) (திஸ்ரஏகம்)

ஏழை யெளியவர்கள்—படும்
இன்னலை யெண்ணிஞல் என்மனம் வேகுதே!
கோழைக் குருடர்களாய்—கல்வி
கொஞ்சமும் இன்றிக் குடிக்கக் கஞ்சியின்றிச்
சூழுந் துயரிடையே—அவர்
தூண்டிற் புழுப்போலத் துன்பந் துடிக்கின்ருர்
கேள்வி முறை யில்லையோ—இவர்
கேடுற் றழுங்கண்ணீர் நாடெல்லாம் பாயுதே
(ஏழை)

ஓட்டைக் குடிசையிலே—ஐயா
ஒன்பது பேர்கள் குடித்தனஞ் செய்கின்ருர்.
ஆட்டுங் குளிர்பனியில்—கந்தல்
ஆடையும் இன்றி அவதிப் படுகின்ருர்
வாட்டும் பசிக்கொடுமை—கடன்
வாங்கிப் படுந்தொல்லை தாங்க முடியாதே....!
மாட்டுக்கு மேய்ச்சலுண்டு—செக்கு
மாடுபோல் வேலைசெய் மாந்தர்க் குணவில்லை !
(ஏழை)

ஆலைத் தொழிலாளர்—பலி
    ஆடுகள் போலே முதலாளி யாட்சியில்,
வேலைப் படுகளத்தில்—மனம்
    வெட்டுண் டுயிரினை விட்டுண்டு வாழ்கின்றார் !
மூலை யிருளினிலே—வெய்யில்
    மூஞ்சியும் பாராது தேய்ந்து வெளுக்கின்றார்
காலச் சுழற்சியிலே—இவர்
    கட்டுகள் விட்டு விடுதலை காணுமோ ?

(ஏழை)

துக்கம் பெருகுதம்மா—பசித்
    துன்பத்தால் ஏழை துடித்துத் துடித்தழும்
பக்கம் திரும்பிடினோ—கண்
    பார்த்துச்செங் கண்ணீர் வடித்து வடித்துயிர்
மிக்க வருந்துதம்மா—இவர்
    வீட்டு மனைவியர் ஊட்ட விதியின்றி
மக்களுடன் அழுவார்—இவர்
    வாழ வழியுண்டோ பாழும் உலகிலே

(ஏழை)

## 73. பசியும்—விதியும்

*சேய் :*

பசி பசி யம்மா—இனிப்
பட்டினி தாங்கேன்
பசி பசி தாயே—கொஞ்சம்
பழங் கஞ்சி போதும்

*தாய் :*

பொறு பொறு மகனே—நாம்
பொறுக்கவே பிறந்தோம்
வறுமை நம் உரிமை—சொல்ல
வாயுமில்லையடா !

வேகும் வெய்யிலிலே—நாம்
விறகு தூக்கி விற்போம்
நோகும் பாழுடலே—மனிதர்
நூறு குறை சொல்வார்

அஞ்சு பணமென்றால்—கருமிகள்
அரைப் பண மென்பார்
கஞ்சிக் கவலையிலே—நம்
கண்ணீர் பெருகுதடா—

மழை வெயிலெல்லாம்—நமது
மண் மனைக் குடிகள்
பழைய கந்தைகளே—நமக்குப்
பட்டுச் சரிகையடா—

*சேய் :*

ஏனம்மா உலகில்—நாம்
ஏழைக ளானோம்
ஏனம்மா சிலபேர்—நம்மை
ஏவிப் பணங் குவித்தார் ?

*தாய் :*

விதி விதி மகனே—தலை
விதி விதி மகனே !

*சேய் :*

விதியைக் காட்டிடம்மா—அதை
வெட்டிப் போடுகிறேன் !

## 74. ஏன் ?

(உசேனி) (ஏகம்)

இந்த வுலகினிலே—பலர்
ஏழைக ளாவானேன் ?
கந்தையுங் கஞ்சியுமே—யின்றிக்
கண்ணீர் விடுவானேன் ?

வீட்டை யமைத்திடுவோர்—நடு
வீதியில் வாழுவதேன் ?
தோட்டப் பயிரிடுவோர்—நிதம்
சோற்றுக்கு வாடுவதேன் ?

கற்ற கவிமணிகள்—தெருவில்
கவலை கொள்வானேன்—
விற்ற வியாபாரி—மாடி
வீடு கட்டுவதேன் ?

கனிகளில் இறங்கித்—தங்கக்
கட்டி யெடுத்தளிப்போர்,
பனிமழை வெயிலில்—வருந்திப்
பசியால் வாடுவதேன் ?

பாடு படாதவர்கள்—உலகில்
பல்லக்கி லேறுவதேன் ?
ஓடி யுழைப்பவர்கள்—மனம்
ஒடிந்து சோர்வதுமேன் ?

ஒருவன் மண்ணாசை—பலர்
உயிரை வாங்குவதேன் ?
இருவினை யுலகின்—போக்கை
எண்ணி வருந்துகின்றேன்.

## 75. தன்னுதவி

(பேஹாக்) (மிஸ்ரஏகம்)

கையில் பலமிருக்க—பல
காரியங்கள் இருக்க—இன்றும்
உய்யும் வழியிருக்க—சும்மா
ஊழ்வினை யென்பாரோ ?

சொந்த மனையிருக்க—விலைச்
சோற்றை யிரப்பாரோ ?—தெய்வம்
தந்த மதியிருக்க—வீண்
சஞ்சலங் கொள்வாரோ ?

தன்கை தனக்குதவி —என்பர்
சத்திய வீரர்களே—உயிர்
அன்பை வளர்த்திடுவார்—அவர்
ஆண்மைக் கனல்பெறுவார்.

தீரர் முயற்சியினில்—செல்வத்
திருமகள் இருப்பாள்—அவர்
பாரினை வென்றிடுவார்—வெற்றிப்
பண்கள் முழங்கிடவே

## 76. கையுழைக்க வேண்டும்

கையுழைக்க வேண்டும்—அதிற்
கருத்து வைக்க வேண்டும்.
பையுறங்குஞ் செல்வம்—பல
பண்ட மாக வேண்டும்.
செய்யுழுது பயிர்செய்—ஏழை
சிந்தை யற்று வாழ,
வையகத்தின் விளைவைப்—பொதுவாய்
வகுக்கு நீதி வேண்டும்.

பாடு பட்ட வர்க்கு—நல்ல
பலன் கிடைக்க வேண்டும்.
நாடு தந்த செல்வம்—சொந்த
நாடு துய்க்க வேண்டும்.
ஏடு கற்ற வர்கள்—தொழிலும்
இணைந்து கற்க வேண்டும்
வாடு மேழை வாழ—செல்வர்
வண்மை வளர வேண்டும்.

## 77. கோனார் பாட்டு

(புன்னாகவராளி) (ஆதி)

ஊதும் புல்லாங்குழலைக் கோனாரே—இந்த
உலகெல்லாம் பால்பொழியக் கோனாரே.!
போது புலர்ந்ததையா கோனாரே—பசும்
புல்மணம் வீசுதையா கோனாரே !

கட்டவிழ்த்து விட்டுவிட்டான் கோனாரே—மாயக்
கண்ணன்வந்து மாடுகளைக் கோனாரே !
வெட்ட வெளிப்புலனில் கோனாரே—மந்தை
மேய்க்கப் புறப்படுவோம் கோனாரே !

தெள்ளமுதஞ் சுரந்திடப் பசுக்களெல்லாம்—
நன்றாய்ச்
செழித்துப் பருக்கப்பசுந் தீனிகொடுப்போம்
துள்ளியிளங் கன்றுவினை யாடிவரவே—இன்பச்
சுதந்தரப் பாட்டொலிப்போம் கோனாரே !

கள்ளப்புலி நடுங்கக் கோனாரே—சுற்றுங்
கண்விழித்துக் கொம்பொலிப்போம்
கோனாரே !
குள்ளநரி மெல்லவரும் கோனாரே—பறை
கொட்டிக் குடல்கலங்க விரட்டிடுவோம்

மாதம் மும்மாரிபெய்யக் கோனாரே—பசு
மடிநிதம் பால்கரக்கக் கோனாரே
மேதினி கோகுலமாகக் கோனாரே—கண்ணன்
வீடுதோறும் விளையாடக் கண்டுகளிப்போம்.

## 78. பொது வுரிமை

(மாண்டு) (ஏகம்)

பொதுவுரிமைத் தத்துவத்தைப் போற்றுவோம்
பூமியெங்கும் சமதர்மத்தை நாட்டுவோம் !
மதிமயக்கும் வேறு பாட்டை ஓட்டுவோம் !
மனிதராக மனிதரைமுன் னேற்றுவோம் !

பாடுபட்டு வேலை செய்யும் அன்பர்கள்—
பட்டினி கிடப்ப தென்ப தில்லையே !
நாடு முற்று மேதொழிலின் நாதமே—
ஞாலமோங்குங் கல்வி நல்குங் கீதமே !

தீன ரென்றும் செல்வ ரென்றும் இல்லையே
செருக்கு மிக்க தனியுடைமை இல்லையே
மானிடர்க்கு மானிடர் சமானமே— இந்த
மண்டலத்திற் கோர்விரிந்த வானமே !

சமவுரிமை என்ப தெங்கள் சுவாசமே—
சாதிமத பேதத் தீமை நாசமே !
எமன்வந் தாலும் அச்சமில்லை யென்னுவோம்—
எவ்வுயிரும் எம்முயிரென் றுன்னுவோம் !

## 79. தேனீ போல

(காபி) (ஏகம்)

தேனீ போலச் சுறுசுறுப் பாய்ச்
　　சேவை செய்வோமே
ஞானி போல நம்பன் பாதம்
　　நாட்டம் வைப்போமே

அடர்ந்த மடமை யிருள கற்றி
　　அறிவைக் காப்போமே...
தொடர்ந்து தொடர்ந்து, தொண்டு செய்து
　　துயரை வெல்வோமே...

கல்வி பரவக் கலைகள் ஓங்கக்
　　கைத்தொழில் செழிக்கச்
செல்வர் பணத்தை வாரி வாரிச்
　　செலவழிப் போமே

உழைப்பும் பிழைப்பும் உலகிற் பெருக
　　உதவி செய்வோமே;
செழிக்கும் பயனைச் சேமமாகச்
　　சேர்ந்து துய்ப்போமே.

## 80. கள்ளுச் சனி

(செஞ்சுருட்டி) (ரூபகம்)

கள்ளுக்கடைப் பக்கம் போகாதே—அண்ணே
காலைப் பிடித்துன்னைக் கெஞ்சுகிறேன்.
சள்ளை மிகப்பல செய்யுமப்பா—நடுச்
சந்தி சிரித்திட வைக்குமப்பா... ! (கள்ளு)

நஞ்சினும் பொல்லாத கள்ளுச்சனி—ஊனை
நாறிக் கிடக்கின்ற கள்ளுச்சனி...
வஞ்சப் பகாசுரன் கள்ளுச்சனி—கொல்லும்
வாளினுந் தீயது கள்ளுச்சனி... ! (கள்ளு)

பித்துப் பிடித்து நடுத்தெருவில்—கண்ட
பேரெல்லாம் பெப்பெப்பே யென்று சொல்லத்
தத்தித் தடுமாறிச் சாக்கடையில் விழத்
தள்ளுமப்பா கெட்ட கள்ளுச்சனி...! (கள்ளு)

பச்சை பச்சையாகப் பேசுமப்பா—வாடை
பட்டாலும் உன்குலம் நாசமப்பா...
பிச்சை யெடுத்திட வைக்குமப்பா—உன்
பிழைப்பில் மண்ணள்ளிப் போடுமப்பா...!
(கள்ளு)

கொண்டாட்டங் காட்டிக் குழியினி—லேயுன்னைக்
கொண்டுதள்ளிப் பாம்பாய்க் கொத்துமப்பா..
பெண்டாட்டி தாலி பிடுங்குமப்பா—பெற்ற
பிள்ளையைக் கொல்லத் தொடங்குமப்பா....!

(கள்ளு)

வீடு பசியினுல் வாடையிலே—கட்ட
வேட்டியில் லாதுதிண் டாடையிலே...
பாடுபட்டு வந்த கூலிப் பணத்தைநீ
பாழுங் கிடங்கிலே போடுவதோ !

(கள்ளு)

கள்ளுச்சனி முகம் பாராதே—நாலு
காசுபணங் கையில் சேருமப்பா
பிள்ளை குட்டிகள் பிழைக்குமப்பா—மனப்
பேயும் அடங்கி உழைக்குமப்பா !

(கள்ளு)

## 81. சுதந்தரம், சுதந்தரம்

(பியாக்) (ஆதி)

சுதந்தரம், சுதந்தரம், சுதந்தரம் வேண்டும் !
தூயவர்க் கருள் செய்யும் தொல்பெருந் தாயே !
பதமிழந் தழிந்து நிர்ப் பந்தத்தில் வாழும்
பாரத மக்களைக் காப்பதுன் பாரம்.

பால்வளந் தேன்வளம் பாலிக்கு நாட்டில்
பஞ்சம்வந் தெம்முயிர் பறிப்பதும் ஆமோ ?
வேல்வளம் பெருகிய வீரரின் நாட்டில்,
வெறுமையும் அச்சமும் சிறுமையும் ஆமோ ?

கண்குளிர் வளப்புள கற்பக நாட்டில்
கண்ணீர்விட் டேழைகள் கதறிடப்போமோ ?
புண்களைத் தீர்க்கஓர் புகலெமக் கிலையோ ?
புத்தரின் சந்ததி, புழுக்களின் விலையோ ?

தீரர்கள் விளங்கிய திருமிகு நாட்டில்,
சிவாஜியும் அப்பரும் சிறந்தநன் னாட்டில்,
சாரமில் சக்கைபோல் தாழ்வது மாமோ ?
சரிநிகர் மனிதராய்த் தலைநிமி ரோமோ ?

கல்வியும் செல்வமும் மல்கிய நாட்டில்,
கண்மூடித் தனங்களின் களிநட மாமோ ?
வெல்லும் வினைத்திறனும் சொல்லினில் உரமும்,
விதியையுங் கடந்திடும் மதியையுந் தருவாய்.

## 82. தேசமும்—பாசமும்

(செஞ்சுருட்டி) (ஆதி)

தேசம் எமதுமனப் பாசம்—அது
தெய்வப் பொலிவுபெற வேண்டும்.
ஓசைக் கடல்முரசம் போலே—இதன்
ஓங்கும் புகழ் முழங்க வேண்டும்.

கட்டுங் கவலைகளும் ஒழிய—துன்பக்
கண்ணீருங் கம்பலையுந் தீர,
சொட்டும் வேர்வையுடன் உழைக்கும்—ஏழைத்
தொழிலாளர் சுகமுற வேண்டும்.

அதஞ்செய் அடிமைநர கொழியப்—பாழும்
அச்சப் பேய்நடுங்கி யோட
சுதந்தர வீறுபெற வேண்டும்—எங்கள்
சொல்லைச் செயலாக்க வேண்டும்.

கல்விக் கதிர்பரவ வேண்டும்—நல்ல
கலைசெய் புலவர் மிக வேண்டும்,
செல்வத் திரள் செழிக்க வேண்டும்—நல்ல
திருக்கள் பெருகிவர வேண்டும்.

போரின் கொடுமைகளைப் போக்க—இந்தப்
பூமியில் அமைதியுண் டாக்க
பாரத சக்தி யெனும் பரிதி—எங்கும்
பளிச்சிட் டொளிபரவ வேண்டும்.

## 83. புதுயுகக் கப்பல்

*(வராளி)* *(ரூபகம்)*

ஏலேலோ பரம்பொருளே,
எல்லார்க்கும் சுகமருளே ! (ஏலேலோ)

பால்போலே பொங்குந்திரை—அதில்
பாய்ந்து விளை யாடுகின்ற
சேல்போலே சுறுசுறுப்பாய்—அண்ணே
சேர்ந்துபட கோட்டிடுவோம் (ஏலேலோ)

காலவெள்ளம் குமுறுதடா—நல்ல
காற்றடிக்கும் காலையிலே
வேல்முருகன் துணையெனவே—அண்ணே
வெற்றிபெறத் துடுப்பெடுப்போம் (ஏலேலோ)

முன்னாளில் ஐங்கடலை முற்றவும் அளந்தே,
முத்துமணி தங்கமலை மொய்த்துவரு கப்பல்,
பன்னாளும் பாரெல்லாம் கடலரசி யென்றே
பண்பெற் றிலங்கிய பழம்பெருங் கப்பல்,
எந்நாளும் அழியாமல் இசைபெற்ற புலவர்
எரித்தவக் காந்தவொளி யேறுமா வீரர்,
பொன்னாளும் செல்வர்—பல போராளும் வீரர்,
புவியாளும் வேந்தர், பலர் போந்தமணிக் கப்பல்
(ஏலேலோ)

மங்கலக் கீதமொடு மனைமாதர் வாழ்த்த
மத்தளம் வாத்தியம் தத்திமி முழங்க
தங்கக்குழல் கோட்டு ஜலதரங்கம் யாழ்
ஸப்தஸ்வரங்கள் கிணீரெனப் பேச
தங்கச் சிலம்பொலி ஜலீர், ஜலீர் என்னத்
தளிரிளம் பூலோக ரம்பையர்கள் ஆட,
துங்கமிகு யோகமுனி வோர்கள் மறை யோத,
சுரநாத வெள்ளத்திற் சொக்குதடா கப்பல்
(ஏலேலோ)

பயனுள்ள பழமையொடு நயனுள்ள புதுமை,
பண்புள்ள உண்மையொடு நண்புள்ள பொதுமை
தயவுள்ள நெஞ்சமொடு தாராள வீரம்
தவயோகம் இடையறு நவயோக வாழ்வு
பயமடிமை வறுமையிருள் பகைசிறுமை யற்ற
பந்தமறு சமரச சுதந்தரானந்தம்
சுயமான வுள்ளறிவுச் சுடரோங்கு தெய்வத்
துறையினைத் தொட்டதடா தூயபுதுக்கப்பல்
(ஏலேலோ)

## 84. தொழில் புரிவோம்

(மோகனம்) (ஜம்பை)

செல்வத் தொழில் புரிவோம்—வாரீர்
சேமமாய் நாடு செழித்திடவே,
கல்விக் கடல் கடப்போம்—சிற்பம்
காவிய மோவிய மாங்கலைகள்
எல்லாம் பயின்றிடுவோம்—மதி
எட்டுமட் டும்பஞ்ச பூதங்களை
வெல்லுந் திறல் படைப்போம்—பல
விஞ்ஞான வுண்மைகள் கண்டிடுவோம்
—வாரீர் (செல்)

பச்சை வய லிருக்க—இசை
பாடித் தவழும் அருவிவளர்
உச்ச மலை யிருக்க—அங்கே
ஓங்கி வளர்கின்ற காடிருக்க,
இச்சை கொண்ட பலன்கள்—விளை
வேற்றிடும் ஆற்றல் மிகவிருக்க,
நச்சடிமைத் தொழில்கள்—செய்து
நாளைக் கடத்தி நலிவோமோ—வாரீர்
(செல்)

தாவும் அருவி யினால்—மின்
சாரத் திகிரி சுழற்றிடுவோம்.
பூவுள் அகழ்ந்திடுவோம்—செம்பும்
பொன்னும் இரும்பு மெடுத்திடுவோம்.
ஆவி ரதங்கள் செய்வோம்—ஏறும்
ஆகாயக் கப்பல்கள் கட்டிடுவோம்.
நாவா யமைத்திடுவோம்—இன்று
நாமுமோர் வல்லர சாகிடுவோம்—வாரீர்
(செல்)

## 85. முன் செல்வோம்

*(காபி)* *(ஏகம்)*

வெற்றி வெற்றி வெற்றி யென்று
வீர ராக முன்செல்வோம்,
நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட
நின்றுழைத்த நேயர்காள்! (வெற்றி)

போட்டி யின்றிப் பாடுபட்டுப்
பூமியைத் திருத்துவோம்
தோட்டி தொட்டு மன்னர் மட்டும்
தொண்டர் சேனை யாக்குவோம். (வெற்றி)

ஒற்றுமையும், உண்மை யன்பும்,
    ஊக்கமுள்ள சேவையும்
குற்ற மற்ற தூய வாழ்வுங்
    கொண்டு லகில் ஓங்குவோம்... (வெற்றி)

பஞ்சை மக்கள் வேலைசெய்தும்
    பட்டி னிகி டப்பதோ...
கஞ்சி யின்றி ஏருழுத
    கந்தன் கை பிசைவதோ ? (வெற்றி)

வீடு கட்டும் தச்சர் கொல்லர்
    வீதியிற் படுப்ப தோ ?
காடு காக்கும் வேலன் பொங்கக்
    கட்டை யின்றிக் காய்வதோ ? (வெற்றி)

நீடு தோட்டம் காத்தவர்
    நிழலில்லா திருப்பதோ ?
ஏடுகற்ற வித்து வானும்
    ஏங்கி யேழை யாவதோ ? (வெற்றி)

வருத்தமின்றி வேலை யேவி
    வாரிக் கட்டிப் பூட்டியே
ஒருத்தன் வாழ ஊர்வளைக்கும்
    காலம் ஓடிப் போனதே... (வெற்றி)

பெட்டி கொண்டு யாருமே
    பிறந்த தில்லை பாரிலே;
கட்டிக் கொண்டு போவதில்லை
    கால வெள்ளந் தன்னிலே! (வெற்றி)

சூரியனும் சந்திரனும்
    சூழு நல் லியற்கையும்,
மாரியும், விளை வயலும்,
    வஞ்ச னைகள் செய்யுமோ ? (வெற்றி)

தொல்லு லகில் யாருமே
    தொழில் செய்கர்ம வீரராய்ப்
புல்லியற் பொறுமை யின்றிப்
    போது மட்டும் துய்த்திடின்,

கல்வி யென்னும் சூரியன்
    கதிரொளி பரவிடின்,
செல்வ ரில்லை ஏழையில்லை
    சேவ கரும் இல்லையே... (வெற்றி)

தரகரின்றித் தன் னுழைப்புந்
    தன்மதிப்பும் ஓங்கினல்,
விரச மான வர்க்க பேத
    வேற்று மைகள் ஏதடா ?

சரிச மான மாக மாந்தர்
சங்க மொன்றி வாழ்ந்திடின்,
அரசனில்லே, ஆண்டி யில்லே,
அடிமை யென்ப தில்லேயே! (வெற்றி)

எட்டுத் திக்கும் அச்சமில்லே
என்று பேரி கொட்டுவோம்
எட்டுத் திக்கும் ஏழை யில்லே
என்று வண்மை நாட்டுவோம்! (வெற்றி)

எட்டுத் திக்கும் சாதி பேதம்
இல்லே யென்று செய்குவோம்.
கட்டில்லாத காற்றைப்போல
கவலேயற்று வாழுவோம். (வெற்றி)

## 86. கிராம சேவை

(*பியாக்*) (*ஆதி*)

தேச நலம் பெருக—கிராம
சேவை செய்வோம் வாரீர் ஆவலுடன்
வாசனே வீசிடவே—கனி
மாமலர்ச் சோலே வளர்த்திடுவோம்.

வீசுவோம் கல்வியொளி—ஞானம்
    வீடுதோறும் விளை யாடவைப்போம்;
காசு பணங்க ளெல்லாம்—பல
    கைத்தொழி லோங்கிடக் கணக்கு வைப்போம்.

தண்ணீர் வசதி செய்வோம்—புதுத்
    தாவர சாத்திரந் தந்து முறைப்படி
மண்ணைப்பொன் னுக்கிடுவோம்—உண
    வாகும் பயிரை மிகமிகப் போற்றுவோம்

பஞ்சப் பெரும்பூதம்—இந்தப்
    பக்கம் வராதினித் துக்கம் வராதையா.
வஞ்சமில் லாதுழைப்போம்—பூமி
    வாரிக் கொடுக்கும் வளமையெல்லாம்.

மாட்டுப் பண்ணை வளர்ப்போம்—உயிர்
    வாழ மிகநல்ல பாலை வழங்குவோம்.
ஆட்டு மந்தை வளர்ப்போம்—நல்ல
    ஆருயிர்த் தொண்டுக ளாற்றிடுவோம்.

நோயின்றி வாழ்ந்திடவே—இங்கே
    நூறாண்டு சீருடன் ஓங்கிடவே நிதம்
தூயசு காதாரநூல்—சொல்லிச்
    சுத்தமாய் வாழப் பயிற்றிடுவோம்.

கள்ளுக் குடி யொழிப்போம்—தீய
　　கஞ்சா புகையிலை நஞ்சென நீக்குவோம்.
வெள்ளையும் வெட்டைகளும்—ஒட்டும்
　　வேசை விடுதியை வேருடன் போக்குவோம்.

கல்லைக் கடவுளென்றே—உயிர்க்
　　கழுத்தை யறுத்துப் பலிகொடுக்கும்—மூடத்
தொல்லை யொழித்திடுவோம்—அருள்
　　சுத்தசன் மார்க்கத்தை நித்தியம்
　　　　　　சொல்லுவோம்
வம்பு வழக்குகளை—சுளு
　　வாகப்பஞ் சாயத்தில் தீர்த்துவைப்போம்
அன்புள்ள ஒற்றுமையால்—ஊரை
　　ஆன்மநேயர் சங்கம் ஆக்கிடுவோம்.

வெற்றுரை வீண்பொழுது—இன்றி
　　விலை பெற்ற நேரத்தை வேலையில் ஊக்கியே,
கற்றுக் கலைவளர்ப்போம்—தொழிற்
　　கையாற் கடவுளை வாழ்த்திடுவோம்.

சிக்கன வாழ்வுரைப்போம்—கடன்
　　சீரழி வில்லாத நேர்மையுடன் ஒரு
பக்குவக் கூட்டுறவால்—நல்ல
　　பண்டகசாலைகள் கண்டிடுவோம்.

தக்க தொண்டர் படையால்—கர்ம
சாதனஞ் செய்குவோம் சக்தியுணர்வுடன்
எக்குல மென்பதில்லே—இனி
எல்லாரும் எல்லார்க்கும் இன்புற
வாழுவோம்.

## 87. சாத்தான் சங்கடம்

(மோகனம்) (ஆதி)

*பல்லவி*

பலியாது போல் இருக்குதே—சனி என் ஜம்பம்
பலியாது போல் இருக்குதே ! (பலி)

*அனுபல்லவி*

சலியாத விழிப்புடன் சத்திய வீரர்கள்
நலியாத திருத்தொண்டு நாடெல்லாம்
புரிகின்ருர். (பலி)

*சரணம்*

தனிவகுப் பற்றனர் ; சமரஸம் பெற்றனர்
சாதி மதநிற பேதத்தை விட்டனர்...
மனிதர்கள் யாவரும் மன்னர்கள் என்கின்றார்;
மண்புவி வாழ்விலே
விண்சுகம் காண்கின்றார். (பலி)

ஆளும் கொடுங்கோலை நாளும் முறிக்கின்றார்;
அஞ்சாது நமனையும் அலட்சியம் செய்கின்றார்;
வாளும் பிளந்தறியா மனத்திறல் வளர்க்கின்றார்;
வலிய சிறைவிலங்கும் மெலியத்
தகர்க்கின்றார்... (பலி)

ஆகாச குண்டிற்கும் அஞ்சாது நிற்கின்றார்;
ஆத்மசக்தி யால்உல காண்டிடக் கற்கின்றார்..
ஓகோஎன் மாயங்கள் ஒடிந்தன, படிந்தன;
உலகே உன்னைவிட்டு விலகினேன் இன்றுடன்.
(பலி)

## 88. எல்லோரும் கல்வி கற்போம்

(செஞ்சுருட்டி) (திரிபுடை)

எல்லோரும் கல்விகற்போம்
இனியதமிழ் நாட்டீர் !
கல்வியில்லார் உலகினிலே
கடையரெனத்தாழ்வார்

எண்ணெழுத்தும் கண்களென்றே
இயம்புகின்றார் புலவர்
கண்களின்றி வாழ்வினிலே
காட்சியின்பம் உண்டோ ?

திருவுடைய கல்வியில்லார்
தேச நல மில்லார்
இருளுடைய வீட்டினிலே
இன்பம்என்றும் உண்டோ ?

ஆளழகும் அணியழகும்
அறிவழகுக் கிணையோ?
தோலழகால் யாதுபயன் ?
சுவையழகே கனியாம்.

நல்லநல்ல நூல்கள்பல
நயமுடனுண் டிங்கே
சொல்லறியா ஊமரெனத்
தோன்றலுமக் கழகோ ?

வீடுதொறும் கல்வியெனும்
விளக்கேற்றி வைப்போம்.
வாடுகின்ற மன்னுயிரின்
வறுமையினைத் தீர்ப்போம்.

எண்ணறிவீர் எழுத்தறிவீர்
இயற்கலைகள் அறிவீர்
பண்ணறிவீர் பயனறிவீர்
பதி நூல்கள் அறிவீர்.

புல்லியவை போயொழியும்
புண்ணியங்கள் பொலியும்
நல்லதெல்லாங் கல்வியினல்
நயந்துவரும் வாழ்வில்

பொன்னளிக்கும் பொருளளிக்கும்
புவியின்பம் அளிக்கும்
சன்மார்க்க வாழ்வளிக்கும்
சத்தியமாங் கல்வி.

கற்கைநன்றே கற்கைநன்றே
கைப்பிச்சை யேற்றும்
கற்றவர்க்கே வெற்றியுண்டு
கல்விகற்க வாரீர் !

## 89. கல்வி நிலய வாழ்த்து

(பூர்வகல்யாணி) (ரூபகம்)

*பல்லவி*

கல்வி நிலயம் வாழ்கவே
கடவு ளருளால் கலைகள் பெருகிக் (கல்வி)

*அனுபல்லவி*

நல்லறிவும் செல்வத் தொழிலும்,
நாளும் பயில நமது சேய்கள் (கல்வி)

*சரணம்*

வீட்டு மொழியிற் புலமை—நம்
நாட்டு மொழியிற் புலமை—மே
ளுட்டுக் கலையிற் புலமை—நல்கும்
ஞான வாணி பீட மாகக் (கல்வி)

ஆண்மை மிக்க வீரர்—நம்
அன்னை நாட்டில் விளங்க,
ஊணும் உடையும் உடலுறுதியும்,
உள்ளு றுதியும் உதவு கின்ற (கல்வி)

மடமை யிருளைப் போக்கும்—தீர
    மனிதரை யுண் டாக்கும்...
புடம்வைத்த பொன்போல வாழ்வு
    பொலியும் ஞான ஒளி விளங்கும் (கல்வி)

## 90. தீனர் சதனம்

*(கல்யாணி)* *(ரூபகம்)*

*பல்லவி*

தீனர் சதனம் பொலிகவே...
    தீனரக்ஷகன் அருளால்... (தீன)

*அனுபல்லவி*

தான தருமசிந்தை யுள்ளோர்
    தருண மழைபோல் உதவி செய்யத்(தீன)

*சரணம்*

பதி யிழந்த நங்கை—நாட்டிற்
    பத மிழந்த மங்கை
கதியிழந்த சேய்கள்—இவர்க்கு
    கருணை மிகுந்த தாயைப் போன்ற (தீன)

கண்ணில்லாத சேய்போல்—நாளும்
கவலை யிருளில் ஏங்கி...
மண்ணில் வீழ்ந்த வாழ்வின் வீணை
மங்க லப்பண் பொங்க வைக்கும் (தீன)

வாடிக் கொடுமைச் சிறையில்—மாதர்
வடிக்கும் கண்ணீர் துடைக்கும்...
மூடி யழுகும் முகத்தைக் கழுவி
முல்லை முறுவல் முகிழ்க்கச் செய்யும் (தீன)

பெண்ணடிமையைத் தகர்க்கும்—மூடப்
பேய்க் கதைகளை யெரிக்கும்
விண் ணுயர வெற்றி முழக்கி
விடுதலைக்கொடி பிடித்து நிற்கும் (தீன)

குயிலைப் போன்ற குழலும்—சோலை
கொஞ்சுங் கிளியின் மொழியும்,
மயிலைப் போன்ற நடையும் வனப்பும்
மலரைப் போன்ற மகிழ்வும் அளிக்கும்(தீன)

## 91. செல்வம்

(தன்யாசி) (ஆதி)

*பல்லவி*

செல்வத் திருவினை கல்வி தொழில் செழிக்க
தேசநலம் பெருகத் தாருங்கள்—நாடு
சேமமுறவே அதைச் சேருங்கள் (செல்)

*அனுபல்லவி*

நல்லுண வுடைமனை எல்லார்க்கும் கிடைத்திட
நலிய மிடிமடமை
பொலியக் கலைக ளெல்லாம் (செல்)

*சரணம்*

கஞ்சியென் றெளியவர் கண்ணீர் வடிக்கின்றார் ;
கற்றும் பலர் வேலை யற்றுத் துடிக்கின்றார் ;
கஞ்சர்தம் செல்வத்தை
வெஞ்சிறை யடைக்கின்றார் ;
காமக் களியாட்டத்தில்
கண்மூடி யிறைக்கின்றார் (செல்)

புதுப்புதுத் தொழில்களும் புதுப்புதுக்கலைகளும்
புதியநல் லறிவுடன் பூரண யோகமும்
பதிப்பொருள் பரவவே பந்தனை சிதறவே
பழுதறு புண்ணியப் பயன்பெற உலகிலே
(செல்)

## 92. ஜனனம்

*(மாண்டு)* *(திஸ்ரஏகம்)*

ஜனசபைக்குத் தேர்ந்தனுப்புங்கள்
தன்னலமிலாத தூய
பொதுநலப் புலவர் தம்மை (ஜன)

மனவிலாசம், மதிவிலாசம்,
வளமையுள்ள வாக்கு வன்மை
இனிது கடமை ஏற்று நடத்தும்
ஆற்றல் எல்லாம் அளந்து போற்றி (ஜன)

உலகில் உள்ளம் உள்ள மாகி,
உள்ளம் அன்பு வெள்ள மாகி,
கலகமான கட்சியற்ற
கருணை யுற்ற கண்ணியரை (ஜன)

அறிவுந்திறனும் அற்றவர்கை
அடிமைப்பான்மை யுற்றவர்கை
அறமிலாத தீயரின்கை
ஆட்சி தந்தால் அழியும் நாடு (ஜன)

அலியின் கையில் வாளைப்போலப்
புலியின் கையில் பொன்னைப்போல
வலிய மூடர் முரடர் கையில்
மன்பதைகள் வருந்திடாமல் (ஜன)

உண்மையுள்ள உரிமை வீரர்
உறுதிகொண்ட தியாக தீரர்
திண்மை கொண்ட தேசபக்தர்
சேவை யோங்க சேமமோங்க (ஜன)

## 93. கலையும் வாழ்வும்

(கரகரப்ரியா) (ஆதி)

வாழ்வைக் கலையாக்கவேண்டும்—இந்த
வையத்தில் தேவராய் வாழ்ந்திட வேண்டும்.
தாழ்வுந் துயரமும் உண்டோ—உள்ளே
தன்னைக்கண் டுலகெல்லாந்
தானாகக் கண்டிடின்

அழகை வளர்த்திட வேண்டும்—அதில்
அமுத ரசம் பருகும் ஆனந்தம் வேண்டும்
கழகம் அமைத்திட வேண்டும்—தூய
காதலும் வீரமும் வேதமும் ஓங்கிட (வாழ்)

பண்ணும் பரதமுடன் கூத்தும்—பேசும்
படமும் தொழில் பலவும் பண்புற வேண்டும்.
எண்ணம் உயர்ந்திட வேண்டும்—ஓர்
இனமாக மானிடர் மனமோங்க வேண்டும்
(வாழ்)

மண்ணிற் பயிரை வளர்க்கும்—விண்
மாரியைப் போல், ஒளிர் சூரியன் போலே,
புண்ணியத் தொண்டுக ளாலே—நாடு
பூரண வளம்பெறப் போகக் கனிகுலுங்க
(வாழ்)

காலைக் கமலத்தைப் போலே—அதன்
கட்டழகில் ஒளி வட்டத்தைப்போலே
மாலைமல்லிகையைப் போலே—முகம்
மலர மன மலர மங்களம் பொங்கிட (வாழ்)

## 92. உடலுறுதி

தெய்வம் விளக்குமணிக் கோயில்—இந்தத்
 தேகம் உறுதிபெற வேண்டும்.
கைகால் வைரநெடுந் தூண்போல்—நல்ல
 கட்டும் கனமுமுற வேண்டும்

வலிவு பிறப்புரிமை யாகும்—இன்ப
 வாழ்க்கை பொதுவுடமை யாகும்;
மெலிவு கொடியதுய ராகும்—வளர்
 வீறு மனிதவியல் பாகும்.

பீமன் போல உடல் வேண்டும்—அதில்
 பிடிப்பிடி யாய்ச் சதைகள் வேண்டும்
காமன் போல் அழகு வேண்டும்—சற்றும்
 கலங்கா மனவுறுதி வேண்டும்

குன்றைக் குலைமத்தெறியுந் தோளும்—கொடுங்
 கூற்றிற்கும் அஞ்சாத நெஞ்சும்
வென்றித் திருவுடைய வினையும்—பொழி
 விண்போல் கருணையுடன் வேண்டும்.

பந்தைப் போல நடை வேண்டும்—இந்தப்
பாரைத் தாங்கும் பலம் வேண்டும்
சிந்தை தெளிவுபெற வேண்டும்—தலை
சிங்கம் போல் நிமிர வேண்டும்.

காலை எழுந்துமுகங் கழுவி—நன்றாய்க்
கசரத் பஸ்கியுடன் செய்தே
மூலை மடித்து வேட்டி துவைத்தே—தலை
முழுகித் தியானம் செய்ய வேண்டும்

குடலை நிதம் கழுவ வேண்டும்—பசி
கொதிக்கும் போதருந்த வேண்டும்
கடலை காய்கனிகள் கலந்தே—சோற்றைக்
கவலை யின்றி யுண்ண வேண்டும்

விந்தைக் காத்து வரவேண்டும்—காம
வேகப் புலனடக்க வேண்டும்
அந்திப் பறவைகளைப் போலே—நல்
லழகை அனுபவிக்க வேண்டும்

வண்டார் மதுமலரைப் போலே—நதி
வளர்க்கும் பயிர் நிலத்தைப் போலே
கண்டார் கண்கருத்து மகிழ—மேனி
கண்ணாடி போலொளிர வேண்டும்.

## 93. அச்சமே யமன்

(காம்போதி)

அரியாட்சிக் காட்டருகே அண்ணலூராம் ;
ஆட்டுமகா நாடொன்று கூடிற் றுங்கே ;
''நரியாட்சிக் கொடுமைகளை நசுக்க வாரீர்
நன்றாகச் சேர்ந்திருந்தால் நமதே வெற்றி.
பிரியாத நமதிடையப் பேய்புகுந்தால்,
பிதுக்கியெறிவோ'' மென்று வீரம் பேசிச்
சரியாகத் தலையாட்டுத் தம்பிரான்கள்
சதைபுரளச் சடைப்புளிபோல் ஒட்டி நின்றார்

சரியான முன்னிருட்டு ; காட்டி னின்று
சலசலத்தே ''ஊள்'' ! என்று கேட்டதம்மா !
''நரியடா ! ஐயையோ செத்தேன் !'' என்று
நாப்பிதுங்கக் கதறிமனம் பதறிப் போன !
தெரியாதா கடாப்புத்தி ; திசைக்கொன் றாகச்
சிதறியதைக் கண்டுநரி சிரித்துக் கொண்டே
அரியவிருந் துண்டகதை யாருஞ் சொல்வார் ;
அச்சத்தால் எமன்வருவான் அறிகு வீரே !

## 94. பாடுபட்டுப் பிழைப்போம்

(வராளி) (ஆதி)

பல்லவி

பாடுபட்டுப் பிழைப்போம்—மனிதா
பலருக்கு நலம்வர உழைப்போம் (பா)

அநுபல்லவி

ஓடுபற்றித் திரியோம்—வேர்வை
ஊற்றிநம் உடலினை வளர்ப்போம் (பா)

சரணம்

உழைக்காத கைகளுக்கு—மனிதா
உண்ண உரிமையில்லை மண்ணுலகில்
பழக்கிய கைகளினால்—இந்தப்
பார்விண் ணுகுங்கர்ம யோகம் செய்வோம்
(பா)

## 95. நாட்டினைக் காத்திடலே

*(குந்தலவராளி)* *(திஸ்ர ஏகம்)*

நாட்டினைக் காத்திடலே—இன்று
நம்மவ ரின் கடமை ;
வீட்டினைத் தாக்குகின்ற—பகை
வீழச் சமர் புரிவோம் !

தெய்வத் துணையுறுதி—தர்ம
தேவி பலந் தருவாள் ;
வெய்யவரை நொறுக்கப்—போர்
வீரர்களே யெழுமின் !

அன்னை யுயிரினுக்கே—யின்று
ஆபத்து வந்த தடா !
பின்னை நமக்குயிரேன் ?—ரண
பேரிகை கொட்டிடுவோம் !

ஒன்னலர் வீழ்ந்தொழிய—தர்மம்
ஓங்கித் தழைத் தொளிர,
முன்னடி வைத்துவிட்டோம்—இனி
முண்டிச் சமர் புரிவோம் !

கூற்றெதிர் நின்றிடினும்—வாளாற்
குத்தி மடித்திடு வோம் !
சாற்றுங்கள் அச்ச மின்றி— "வீர
சக்தி ஜய" மெனவே !

## 96. எடுங்கள் ஆயுதங்களை

(லா மார்செய்யேஸ் தழுவல்)

(காபி) (திஸ்ரஏகம்)

*பல்லவி*

எடுங்கள் ஆயுதங்களை
இகற்படையைச் சாடுவோம் !
தொடை நடுங்கும் பேடி யார் ?
துணிந்த வீரர் முன் செல்வோம் !

*ஓச்சுகள்* (ஐம்பை)

செல்வோம் சுதேசப் புதல்வர்—நம்
சீர்த்தி பெருகுமிந் நாளே
கொல்பகை இரத்தக் கொடியைத்—தாங்கிக்
கோபங் குமுறுது காணீர் !
நல்லற மக்களை வெட்டிப்—படு
நாசஞ்செய் மோசப் பகையை
வெல்வோம் ! பெருமிதங் கொள்வோம்—வாரீர்
வேகமாய்ப் போர்க்களஞ் செல்வோம் ! (எ)

அண்டிய கூலிப் படைகள்—நம்மை
    ஆள விதிசெய்ய லாமோ ?
தொண்டடி மைசெய்து நாமும்—தேசத்
    துரோகிகள் ஆவது நன்றோ ?
பண்டு புகழ்பெற்ற நாட்டீர்—இங்கே
    பாழ்செய் அரக்கர் நலிய—நம்மைக்
கண்டு நடுங்கக் கொடுங்கோல்—வீரக்
    காளைகள் போர்தர வாரீர் ! (எ)

வீரன் ஒருவன் விழுந்தால்—பத்து
    வீரர் எழுந்துமுன் நிற்பார் ;
போரில் இரத்ததைச் சிந்தி—முன்னே
    போந்தநந் தோழரை எண்ணி,
வீறுகொண் டேசமர் செய்வோம்—என்றும்
    விடுதலை தந்திடும் சக்தி—அடல்
ஏறுபோல் வாருங்கள் சேர்ந்தே !—நம்
    ஏற்றம் பெருகிட நாட்டீர் ! (எ)

## 97. கட்டுகளை உடைப்போம்

(செஞ்சுருட்டி) (திஸ்ர ஏகம்)

கட்டுகளை யுடைப்போம்—எங்கள்
    கைவலி யுள்ளமட்டும்
முற்றுகை போட்டெதிர்ப்போம்—எதிர்
    மூளும் பகைச் சினவாள்
வெட்டி மடித்திடினும்—அஞ்சா
    வீரர்களாய் விழுவோம்—குண்டு
சுட்டுப் பொசுக்கிடினும்—நாம்
    சுதந்தர ராய் இறப்போம் ... (கட்)

கட்டி முத்தங் கொடுக்கும்—இளங்
    காதல் மனைவியர்காள்,
பெற்று வளர்த்தவர்கள்—உடன்
    பிறந்த சகோதரர்காள்,
உற்ற வுறவினர்காள்—எங்கள்
    உள்ளன்பு நேயர்களா,
வெற்றி விடுதலைக்கே—இன்று
    வீரச் சமர்புரிவோம் ! (கட்)

வென்றுயிர் கொண்டுவரின்—எங்கள்
வீரப் புகழ் உரைப்போம்,
கொன்றுயிர் மாய்ந்து விடின்—எங்கள்
கொற்றம் உல குரைக்கும்
பொன்றும் உடல் கொடுத்தே—இந்தப்
பூமி நலம் பெறவே,
சென்று, சமர்புரிவோம்—உங்கள்
சீரிய பேர் விளங்க... (கட்)

ஆசி யளித்திடுவீர்—எங்கள்
அன்பிற் குரியவர்காள்...
ஆசி யளித்திடுவீர்—எங்கள்
ஆண்மை பெருகிடவே ;
ஆசி யளித்திடுவீர்—உங்கள்
ஆன்ற புகழ் விளங்க...
தேச விடுதலைக்கே—சமர்
செய்து ஜயம் பெறுவோம். (கட்)

## 98. நம்பிக்கை

(காம்போதி)

நம்பிக்கை கொண்டிடுவாய் ;
நல்லடியார்க் கெந்நாளும்
துன்பம் வருவது போல்
தோன்றி யின்பம் வாய்க்குமப்பா !

மாரிக்குப் பின்னே
வசந்தக் குயில் கூவும் ;
பாரிடரின் பின்னே
பரமசுகப் பாட்டுதிக்கும் !

சிலுவையிட்டும் அன்பு
சிரஞ்சீவி யாய்வாழும் ;
கழுமரமும் பட்டெரியும்
கண்கண்ட வுண்மையினால்.

காழ்த்தவுல கின்மடமை
கல்லால் எறிந்தாலும்,
வாழ்த்துமடி யார்திறமை
வாய்மையால் வென்றிடுமே !

## 99. அடக்கம்

(ஸ்ரீராகம்) (ஆதி)

உரிய வொண்கதிர் உற்றிடு மட்டும்,
உட்குவிந் துறை தாமரை யொப்பத்
திரி கரணமுந் திண்மையுற் றுள்ளே
தேசு றக்குவிந் தேதிற லோங்கி,
அரிய காரியம் ஆற்றிடு மேலோர்,
அடங்கிக் காலத்தை நோக்கி யமர்வார் ;
பெரிய நல்வினை பீடுறச் செய்தார்
பேசருந் தவம் பேணிய நல்லோர்

சத்த மிட்டுச் சபதங்கள் கூறுர் ;
சகவசை யிசை யைச்சம மென்பார்
சித்த மொன்றிச் செயல்புரி வார்கள் ;
செய்வி னைப்பயன் சிந்தையிற் கொள்ளார்.
புத்தர், வள்ளுவர், போன்ற புலவர்
பொறுமை கொண்டு புகழ்சிறந் தார்கள்
உத்தமர் வழி பற்றி யுழைப்போம்...
உயிர்க்குங் கீதை யுருவென வாழ்வோம்.

## 100. வழி நடை

(கமாஸ்) (திஸ்ர ஏகம்)

சக்தி சக்தி சக்தி என்று
தாவித் தாவி முன்செல்வோம்
எத்திசையும் வெற்றி நாட்டி
இவ்வுலகை யாளுவோம் (சக்தி)

இடி முரசு கொட்டுவோம்
இரும்பென நரம்புகள்
துடிதுடிக்கப் போர் செய்வோம்
துணிந்த வீரச் சிங்கங்காள் (சக்தி)

வைய மெல்லாம் சாந்தமாக
வாழத் துன்பந் தாழவே
தெய்வ பக்தி ஜீவ பக்தி
தேசபக்தி செய்குவோம் (சக்தி)

தோளுயர்த்தித் தலை நிமிர்த்து,
சோர்வி லாத வீறுடன்
ஆளும் கர்ம வீரர் கூட்டம்
அன்னை நாடு வாழ்கவே (சக்தி)

வெற்றியுண்டு வீரமுண்டு
வேக மாக ஏகுவோம்
ஒற்றுமையாய் வாருங்கள்
உடன்பிறந்த தோழர்காள்! (சக்தி)

## 101. தொண்டர் பாட்டு

*(புன்னுகவராளி)* *(ஆதி)*

தொண்டுகள் செய்திடுவோம்—பொதுநலத்
தொண்டுகள் செய்திடுவோம்
வண்டுகள் போலச் சுறுசுறுப் பாகவே
வாழுவோம் தோழர்களே (தொ)

ஊருக்கு நன்மை செய்ய—இந்த
உடலுக்கு நன்மைவரும்
ஆருக்கும் அன்புடன் இன்பம் பெருகவே
அமைதி வளர்ந்திடவே (தொ)

ஒற்றுமைக் கோயிலிலே—மனம்
ஒன்றிஒன்றை நினைப்போம்
கற்றுணர் காரியம் வெற்றியடைந்திடக்
கடவுளின் துணைபெறுவோம். (தொ)

நோய்களைத் தவிர்த்திடுவோம்—சாவை
நூறிடும் வீறுகொள்வோம்
தாயெனும் இயற்கையைச் சேயென நம்பியே
சாதனம் செய்திடுவோம் (தொ)

வேற்றுமைச் சண்டையின்றி—இங்கே
விதவித மதங்களின்றி,
நாற்றிசை யுலகினை மாற்றிச் சமரஸ
நகரெனச் செய்திடுவோம் (தொ)

தெய்வநிலை பெறவே—யோகத்
தீயை வளர்த்திடுவோம்
மெய்யொளி துலங்கிடப் பொய்யிரு ளகன்றிட
விண்ணரசைக் கொணர்வோம் (தொ)

## 102. அருணப் புன்னகை

அருணப் புன்னகை அழகுசெய் உலகின்
வருண வனப்பை வளமுறக் கண்டே,
மானிட வாழ்வெனும் வரநதிக் கரையில்,
யானருட் கனவில் எனைமறந் திருந்தேன்.
பூங்குயி லிசையும், மாங்கனி மணமும்,
ஓங்கிய வானின் ஓமொலி நிறைவும்,
ஆன்மா விற்கோர் அழகை அளித்து,
நான்அறத் தானென நர்த்தனம் செய்த
பரவசக் காட்சியில் படிந்துநான் உறங்கும்
இரவிலோர் பயங்கரம் எதிர்ந்ததைக் கேளீர்.
இன்பங் குலுங்கும் இயற்கை யுலகைத்
துன்பக் கொடுந்துயர் துளைத்திடக் கண்டேன்
மறவலி யரக்கரின் சிறையிலே வாடும்
அறமகள், கண்டேன் ஆவென் றலறினேன்:
போர்வெறி யிரத்தப் புயலெறிந் தாங்கே
பார்மிசை அணுவெடிப் பந்தய மாடி,
பிணமலை குவித்துப் பணமலை குவித்து,
நிணமலை போல நீளுறக் கண்டேன்.
சிந்தை சுழலத் திகைத்திடும் போது,
விளங்கிய தாங்கோர் உளங்கவர் ஜோதி:

பளிங்குக் கனலெனப் பளிச்சிடும் சக்தி
இருளைப் பிளந்தாள் ; இரவியைத் தூண்டினுள்
அருளைப் பொழிந்தாள் : அன்பொளி வீசினுள்.
கருணைக் கண்ணுற் கவலையை ஓட்டினுள்
மரண பயத்தை மாறிடச் செய்தாள்
கொடிய நிருதரைக் குழந்தைபோ லாக்கி,
நொடியிலே உலகு நூதன முறவே
புன்னகை வீசிப் பொன்னெழில் காட்டி,
என்னுள் மறைந்தபின் எங்கும் இருந்தாள்.
மனதைத் திருத்தி, மனிதரைத் திருத்தி
மானிடர் திருந்த மாநிலந் திருத்தி

முதுயுகம் போக முன்முன் செல்லும்
புதுயுகத் தேரில் புதியவாழ் வின்பம்
குமுதமிட் டாடும் அமுதக் கடல்போல்
பல்லாண் டுடனே நல்லிசை முழங்க,
வனப்புறப் பவனி வந்திடச் செய்தாள்.
சத்திய யுகத்தின் உத்தம மைந்தரைச்
சித்திகள் பெற்ற தெய்விக ஜாதியைக்
கண்டேன், என்னையும் கரையிலாக் கடலாய்
விண்டேன் மௌன வெளிமறைந் தேனே.

## 103. சேருவோமே

(செஞ்சுருட்டி) (ஆதி)

சேருவோமே—நலம்—கோருவோமே
செகமெல்லாம் அரவிந்தத் தேனைப்
பருகிடவே (சேரு)

தேவஜீவனந்தரும் திவ்விய ரசம்—அது
சிற்சக்தி பொழிந்திடும் அற்புத ரசம்
பூவினைப் பொன் னுக்கிடும் புண்ணிய ரசம்—நல்ல
புதுயுக வாழ்வுதரும் பூரண ரசம். (சேரு)

எமபய மில்லையெனப் பாடுவோமே—என்றும்
இன்பமே உலகென ஆடுவோமே...
அமரக் கனலை நெஞ்சில் ஊக்குவோமே-வாழ்வை
ஆனந்தக் காவியம் ஆக்குவோமே... (சேரு)

உன்னத ஒளியினில் ஓங்குவோமே—இந்த
உலகை அழகுபெறத் தாங்குவோமே
மன்னுலகில் வானரசை நாட்டுவோமே—இந்த
மானிடத்தைத் தெய்வமென மாற்றுவோமே.
(சேரு)

## 104. புதுநகரக் கும்மி

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் என
ஓலமிட் டாடும் கடலருகே,
பூமிக்கெல்லாம் ஒரு புதிய விண்ணகம்
பொங்கிப் பொலிவதைப் பாருங்கோடி:

சுத்தமும், சாந்தமும் சொக்கும் அழகுடன்
சுதந்தர மாக உலாவும் அம்மா ;
சத்தமில் லாது சதாநலஞ் செய்திடும்
சாதகர் கூட்டத்தைப் போற்றிடுவோம்

கல்வி சிறந்த கலைவாணர்—தெய்வக்
காதல் வளரும் அருளாளர்,
எல்லாரும் ஓர்குலம் ஓர்நிக ராகவே
இணைந்து வாழுந் திருவாளர்

ஓங்கிய தியானத் திருக்கோயில்—சுற்றி
யோக புரியினைப் பாருங்கோடி.
மாங்கனி வாய்க்குயில் கிள்ளைக்குச் சொல்லிடும்
வசந்த மங்களம் கேளுங்கோடி:

பூவுங் கனியுங் குலுங்குமெங்கும்—பரி
பூரண னந்தம் துலங்கு மெங்கும்
பாவும் பணியும் பரவுமெங்கும்—தெய்வப்
பண்புடன் அன்பு வளருமெங்கும்

சூது பொறாமையும், சூழ்ச்சியும், தீமையும்
துள்ளும் அகங்காரச் சள்ளைகளும்,
வாது வழக்கும், மனத்தின் விகாரமும்
வஞ்சகக் காமமும் இல்லையிங்கே:

வீடு திருமகள் வாசமம்மா—இதன்
வீதியெல்லாம் ஆன்ம நேசமம்மா.
ஆடும் விஞ்ஞான ப்ரகாசமம்மா—இங்கே
அனைத்தும் தெய்வ விலாசமம்மா:

பொல்லாங்கு செய்திடும் பேச்சுமில்லை—இங்கே
பொய்யிரு ளச்சத்தின் மூச்சுமில்லை.
எல்லாரும், எல்லார்க்கும், எல்லா நலங்களும்
இயற்றும் சுதந்தரச் சோலையம்மா

சாத்திரக்கோத்திரச் சண்டையில்லை—இங்கே
சாதி மதங்களும் அண்டவில்லை.
ஆத்திர வார்த்தையைக் கண்டதில்லை—இந்த
ஆனந்தச் சக்தியின் மண்டலத்தில்:

யோகத்திலே, சுத்த போகத்திலே—மதி
 யூகத்திலே, தெய்வத் தாகத்திலே
ஏகத்திலே வளர் நாகரிகபுரி
 இந்த உலகினில் விந்தையம்மா!

எண்ணரும் செல்வத் தொழிலுடையார்—இங்கே
 எல்லோரும் சக்தி எழிலுடையார்.
விண்ணவர் போல விளங்கிடுவார்—செய்யும்
 வினையில் வெற்றி துலங்கிடுவார்:

சத்திய திவ்விய ஜீவனமே—நல்ல
 சாதன மான தவவனமே.
நித்தியா னந்தந் தினந்தினமே—இங்கு
 நிலவு கின்றதைப் பார்மனமே

சாந்தசிவசுப மங்கள சுந்தர
 சத்திய சன்மார்க்க விண்மணியே ;
தீந்தமிழ் நாட்டுக்குத் தேவலோகம் வந்த
 திருவைப் பாரடி கண்மணியே !

## 105. ஓங்குக திருவருள்

ஓங்குக திருவருள் ஓம் சுத்த சக்தி !
ஓங்குக திவ்விய ஜீவனம் உலகில்.
நீங்குக பிணியிடர், நிருதரின் கொடுமை.
தாங்குக தருமமித் தாரணி நலனே !

உண்மையும் கருணையின் உள்ளமும் விரிக !
திண்மனத் தீரரின் சீர்த்திகள் பெருக !
புண்ணிய பாரதப் பூரணப் புலவர்
பண்ணிய தவக்கதிர் பாவனந் தருக !

துன்பங்கள் யாவையுந் தூருடன் பெயர்க !
இன்பங்கள் யாவையும் எழிலுடன் உயர்க !
நண்பர்கள் பொதுநலப் பண்புடன் வாழ்க !
அன்படி யார்களின் அருட்பணி வெல்க !

செங்கதிர் போலநம் சிந்தனை பொலிக !
நங்கதி யாகிய நாயகன் அருள்க !
பொங்குக வான்சுகம் ! புதுயுகம் வருக !
மங்களம் ஓங்குக ! மன்னுயிர் வாழ்க !

புது யுகப்பாட்டு
முற்றிற்று.

ஸ்ரீ அரவிந்த ஆசிரம அச்சகம்
புதுவை

323/47/1500.

# புதுயுகப் பாட்டு

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 16 | மங்லக | மங்கல |
| 17 | 3 | கேட்டியே | கொட்டியே |
| 28 | தலைப்பு | கொட்டுங்கன் | கொட்டுங்கள் |
| 41 | ,, | வன்-தென் | வள்ளுவர் தென் |
| 42 | 10 | உயிர் | உயர் |
| 87 | 2 | அருளின் | அருளில் |
| ,, | 5 | கூட்டுரவு | கூட்டுறவு |
| 96 | 14 | ஞேங்குகிட | ஞேங்கிடவே |
| 140 | 13 | குழலும் | குரலும் |
| 142 | தலைப்பு | ஜனனம் | ஜனமனம் |
| ,, | 8 | உலகில் | உலகின் |
| 145 | 1 | லிளக்கு | விளங்கு |
| 151 | 11 | இரத்ததை | இரத்தத்தை |
| 152 | 11 | வர்கள் | வர்காள் |
| 156 | 13 | நிமிர்த்து | நிமிர்ந்து |
| 159 | 2 | காண்டே | கண்டே |

பாட்டின் பக்கம் எண்கள்: 145. முதல் 93, 94, 95, ......107 என்று திருத்துக.

# சுத்தானந்தரின் கவியமுதம்

1. **கவிக்கனவுகள்** ரூ. 1-8-0

   உள்ளத்தை அள்ளும் கலைச் சித்திரங்கள்; புதிய புதிய அழகு தோன்றும் காட்சிப்படலங்கள்

2. **கீர்த்தனாஞ்ஜலி** ரூ. 3-8-0

   672 இன்னிசைப் பாடல்கள்; இசை நுட்பங்கள் நிறைந்தவை. அரிய சங்கீத கலா நிதி.....

3. **நவரஸ நடனாஞ்ஜலி** ரூ. 3-0-0

   நாட்டிய சாஸ்திர விளக்கத்துடன், நூறு நடனக் காட்சிகள்

**புதுயுக நிலையம்,**

**புதுச்சேரி**